கல்லிகை

ஞானி



கல்லிகை

ஞானி

ப்ரதிபா பதிப்பகம்
1/4, சி. ஜி. வி. நகர், கொமாரபாளையம்,
கோயமுத்தூர் 641 026

கல்லிகை
எனக்குள் ஒரு வானம்

இரு குறுங்காவியங்கள்

ஞானி

முதற் பதிப்பு
செப்டம்பர் 1984

அட்டை ஓவியம்
Rene Magritte
1898-1967
The Castle of the Pyrenees

அச்சாக்கம்
புக் ப்ரிண்ட் 1/4 சி ஜி வி நகர்
கோயமுத்தூர் 641 026

வெளியீடு
ப்ரதிபா பதிப்பகம்
1/4 சி ஜி வி நகர் கொமாரபாளையம்
கோயமுத்தூர் 641 026

விலை
ரூ 7-50

நினைவுப் பாதையில்
மீண்டும் ஒரு முறை

கல்லிகை

எனக்குள் ஒரு வானம்

...எங்கிருந்து?
...எதை நோக்கி?

எழுபதுகளின் தொடக்கத்தில் காலத்தின் தேவையாய், தமிழ்க் கவிதைக்கு ஒரு புதுவீச்சாய்த் தோன்றியது 'வானம்பாடிகள்' கவிதை இதழ்.

மெல்லவே தோன்றி— ஆனால் வேகமாய் வளர்ந்து- வளர்ந்த வேகத்திலேயே வீழ்ச்சியடைந்தது வானம்பாடிகள் 'இயக்கம்'. இதன் வரலாறு இதுவரை சொல்லப்படவில்லை. இந்த வரலாற்றைச் சொல்லும் துணிவு, இதில் சம்பந்தப்பட்ட சிலர்க்கு இல்லை. சொல்ல வல்லவர்களும் 'நாகரிகம்' கருதி இது வரை சொல்லவில்லை.

உண்மை உணர்வோடும் பொறுப்போடும் வானம்பாடிகள் வரலாறு எழுதப் படும்போது, இன்று தமிழ்க் கவிதைக் களத்தில் தலைகனத்துத் திரியும் சில போலிகளின் முகத்திரை கிழியும்.

தமிழ்க் கவிதையின் பேரெழுச்சிக்குத் தடையிட்டுத் தம் முற்றத்தில் சாக்கடையாக்கி, அதன் நறுமணத்தில் புரளும் சில பேர்வழிகளின் நரித்தனம் புரியவரும். ஏதோ சில தனி நபர்களின் மோதலால் இயக்கம் சிதைந்தது— என்று பொய்சொல்லித் திரிபவர்களின் உண்மை நோக்கம் புரியவரும்.

வானம்பாடிகளுள் ஒருவராய் இருந்த காலத்தில், குறிப் பாக நான் ஒரு விமர்சகன் என்ற முறையில்தான் இருந்தேன். என்னைப்போலவே சுந்தரம், ஜீவஒளி என்ற நண்பர்களும். கவிதைகள், தமிழ்க்கவிதை வரலாறு, வானம்பாடிக் கவிஞர் களின் படைப்புக்கள், கவிதைக்கும் தத்துவத்திற்கும் உள்ள உறவு முதலியவை பற்றிச் செழுமையான விவாதங்கள் நடை பெற்ற காலம், வானம்பாடிகளின் 'பொற்காலம்'. புவியரசு, அக்கினி, சிற்பி, கங்கைகொண்டான், இளமுருகு, மேத்தா ஆகியவர்களின் பெயர் சொல்லத்தக்க-தரமான கவிதைகள் எழுதப்பட்ட காலம் அதுதான். விமர்சனங்கள் படைப்பெல்லை யைக் குறுக்கவில்லை; மாறாக விரிவாக்கின: ஆழப்படுத்தின. படைப்பாளிகளின் புகழ் பரவிய வேகத்தில் விமர்சகர்கள் தடைக் கற்கள் ஆனார்கள். படைப்பும் தத்துவமும் இணைய முடியு மா?.. படைப்பாளியை விமர்சனம் செய்யத் தத்துவவாதிக்கு என்ன தகுதி இருக்கிறது?.. என்ற கேள்விகள், ரகசிய முணு முணுப்புகளாக-சில சமயம் வெளிப்படையான மோதல்களாக.

இந்தச் சூழலில்தான் 'கல்லிகை' பிறந்தது.

வானம்பாடிகளுள் சிறப்பாகக் கவிதை தெரிந்த சிலருள் ஒருவர் நண்பர் இளமுருகு. அவருடன் விவாதித்தேன். நமது சமூகத்தில் பெண்கள் படும் பாடுபற்றி நாம் கவிதை எழுதவேண்டும். அகலிகை கதை அற்புதமாக இப்பிரச்னை யை இன்றும் சொல்லும். புராணக்கதை என்று சிலரால் இகழப்பட்டாலும், இவ்வகைக் கதைகள் காலத்தால் அழியாத வலிமை பெற்றவை. புதுக்கவிதை, மரபின் தொடர்ச்சியாக-அதேசமயம் விடுபடலாக-மரபின் சாரத்தோடு வலிமை பெறுமே ஒழியத் தளர்ச்சி பெறாது. கவிதை அறிந்த அவர், அகலிகை கதையை நிகழ்கால உள்ளடக்கத்தோடு படைப்பாக்க வேண் டும் என்ற விருப்பத்தை அவரிடம் பலமுறை தெரிவித்தேன். பெண்விடுதலை என்ற பிரச்னையில் ஆர்வம் கொண்டவர் அவர். ஏற்கெனவே சில கவிதைகள் இம்முறையில் எழுதி-யவர். அவர் தகுதிபற்றி எனக்கு நம்பிக்கை இருந்தாலும், அவர் வழியே கவிதை உருவாகவில்லை.

அகலிகை காத்துக் கொண்டிருந்தாள். என் மனத்தில் கனத்துக்கொண்டிருந்தாள். மரபுக் கவிதைமுறையில், எனக்கு மனநிறைவு தரும் முறையில் முன்பே எனக்குப் பயிற்சி இருந்தது. மரபுக் கவிதைமுறை போதாமை அறிந்து, புதுக்கவிதை முறையைத் தேர்ந்தபொழுது சில சோதனை முயற்சிகளை நானே செய்திருந்தேன். கனத்துக் கொண்டிருந்த அகலிகை கதையைக் கரு அளவில் இனியும் வைத்துக்கொண்டிருக்க முடியாது என்ற நிலையில், நானே எழுதுவது என்று துணிந்து நான்கே நாட்களில் எழுதிமுடித்தேன். பிறகு சில நாட்கள் கழிந்து, சில திருத்தங்கள் செய்தேன். அக்கினி எனக்கு உதவியாக இருந்தார். புவியரசு, கல்லிகை என்ற பொருத்தமான பெயரிட்டார். கங்கையின் நவீன ஓவியத்தோடும் அக்கினியின் அறிமுகத்தோடும் வானம்பாடி ஏழாவது இதழில் 'கல்லிகை' வெளிவந்தது.

இடையில் மேலும் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். புதுக் கவிதை, குறுங் கவிதையாகவே இருக்கும், இருக்கவேண்டும் என்று சிலர் இலக்கணப்படுத்தியிருந்தனர். இல்லை, நெடுங் கவிதையாக, கதைக் கவிதையாக, குறுங்காவியமாக, பழங் கதையைப் புதுமை உள்ளடக்கத்தோடு புதுமைப்படுத்துவதாகப் புதுக்கவிதையை உருவாக்கமுடியும் என்று நான் கூறிவந்தேன். சிற்பியின் 'சிகரங்கள் பொடியாகும்', கங்கையின் 'எந்தக் கண்ணன்..' ஆகிய கவிதைகளும் இப்படித் தோன்றியவையே. கல்லிகையும் இப்படியே.

அகலிகை கதையை எத்தனையோ பேர், தத்தம் பார்வையில் திரும்பத் திரும்பப் படைப்பாக்கியுள்ளனர். மாறி வரும் சமுதாயத் தேவைகள், இப்படி எழுதுவதற்கான தூண்டுதலாக அமைகின்றன. எனது முயற்சி, மார்க்சிய வட்டாரத்தவர் ஒருவரின் முயற்சி. என் பார்வைக்கு ஏற்றபடி, பழங்கதையில் சில மாறுதல்களைப் புகுத்தியுள்ளேன். இப்படிச் செய்வதற்கான உரிமை, படைப்பாளிக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. கதையில் செய்துகொண்ட மாறுதல்கள், அவற்றுக்கான தேவை முதலியவை பற்றி வாசக நண்பர்கள்

மதிப்பீடு செய்வார்களாக! அதேசமயம் படைப்பாளிகளாக இருக்கும் நண்பர்களை வேண்டிக்கொள்வேன். நமது இதிகாசங்கள், புராணக்கதைகள், காவியங்கள், அவைபோலவே பைபிள் முதலியவை.. அதுபோலவே வரலாற்றிலும் எத்தனையோ அற்புதக் கதைகள், நம் பார்வைக்காகவும் கைவண்ணங்களுக்காகவும் காத்துக் கிடக்கின்றன. மரபின் வலிமை பற்றி விவாதிக்க டி. எஸ். இலியட் போன்றவர்களை இங்குத் துணைக்கு அழைக்க வேண்டியதில்லை. பழங்கதைகள்போலவே, நம்கால மனிதர்களும்! இவர்களின் சாதனைகள், வெற்றி தோல்விகளைப் பதிவு செய்யாத இலக்கியம், எப்படி, உயிர்த் துடிப்புடையதாக, உண்மையானதாக, எதிர்காலத்தை உருவாக்கத் தக்கதாக, வாழும் இலக்கியமாக, இயங்கமுடியும்? கூடவே, ஓர் உண்மையைக் குறிப்பிட்டுக்கொள்வேன். மாறுவது மரபு: இல்லாவிட்டால், மாற்றுவது, மரபு.

கல்லிகை-குறுங்காவியம் எழுதும்போது எனக்குள் ஏற்பட்ட அனுபவத்தை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அகலிகை கதையைப் பெண்விடுதலை நோக்கில் எழுதுவதே என் முதல்நோக்கமாக இருந்தது. தீவிரமான படைப்பியக்க மனோநிலையில் அகலிகை கதைக்குள் மனித வரலாறும் தத்துவமும் வெள்ளம் எனத் திரண்டு கலந்தன. நானே எதிர்பாராத இயக்கத்தில் இழுத்துச் செல்லப்பட்டேன். இறுதியில் அகலிகை கதை, மனிதனின் கதை, மனித விடுதலையின் கதையாயிற்று. மார்க்சியப் பார்வைச் செறிவின் உரத்தை எனக்குள் முழுமையாக உணர்ந்தேன். மார்க்சியச் செறிவுக்கும் கலைக்கும் உள்ள ஆழ்ந்த உறவை, கல்லிகை வெளிப்படுத்துகிறது. வரலாற்றின் போக்கில் உண்மையின் ஆழத்தில் செல்லும்போது கலையும் கற்பனையும் எப்படிக் கொந்தளித்து வெளிப்படுகின்றன என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தேன். கலை என்பது ஒரு பூச்சு: ஒட்டுவேலை என்று கருதும் பார்வை, மார்க்சியப் பார்வையாகாது. அதுபோலவே, கலைக்கும் மார்க்சியத்திற்கும் ஒத்துவராது என்பது உண்மைக்கு எதிர்ப்புக்குரல்.

''எனக்குள் ஒரு வானம்...'' என்ற கவிதை சுமார் 1973-74 ல் எழுதப்பட்டது.

அந்நியமாதலைக் கருப்பொருளாகக் கொண்டு கவிதை எழுதவேண்டும் என்று நான் இருந்தபோது ஒரு சோக நிகழ்ச்சி. பல்லாண்டுகள் என்னோடு நெருக்கமாகப் பழகிய நண்பர் தேவராஜ் தற்கொலை செய்துகொண்டார். எல்லாவற்றையும் என்னோடு கலந்துகொண்ட அவர், தான் இறக்கப் போவதுபற்றி என்னோடு பேசவில்லை. ஒருவேளை சூழ்நிலையின் திடீர்த் தாக்குதலால் உடனடியாக முடிவெடுத்து அவர் தற்கொலை செய்திருக்கவேண்டும். அந்த அருமை நண்பனின் சாவு என்னைப் பல மாதங்கள் பாதித்தது. அவர் கம்யூனிஸ்டுக் கட்சியோடு முன்பு தொடர்பு கொண்டிருந்தவர். பின்னர் தன்கட்சி திருத்தல்வாதக்கட்சி என்று கண்டு அதனோடு முரண்பட்டு, பிறகு அதிலிருந்து விலகியிருந்தார். அப்போது தான் அவர் என்னோடு உறவுகொண்டார். பொதுவுடமை பற்றிய ஆர்வம் அவரிடம் இறுதிவரை தணியவே இல்லை. நெசவாளர் குடும்பம்: நிறையப் பிரச்னைகள்: அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். மனைவிக்கும் அவருக்கும் இடையில் சில தீராத பிரச்னைகள். பிரச்னைகள் முற்றி வெடித்த நிலையில் அவர் சாவைத் தனக்கு விடுதலையாகத் தேர்ந்திருக்கவேண்டும். அநேகமாக வாரத்திற்கு இருமுறையாவது என்னைச் சந்திக்கவரும் என் அருமை நண்பர், தன் 'இறுதி' நாளில் என்னோடு பேசியிருந்தால் சாவைத் தவிர்த்திருக்க முடியுமோ என்ற கவலை எனக்கு. ஒருவேளை திருத்தல்வாதம் பதிந்திராத கட்சியை அவர் சார்ந்திருந்தால் மரணத்தை அவர் தேர்ந்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன்.

நாளடைவில் இவர் நினைவாக இருந்து, இவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து சிலவற்றைத் தேர்ந்து... அப்புறம் என் கற்பனையில் ஒருகதையை உருவாக்கிக் கொண்டு...இறுதியாகக் கவிதை செய்து முடித்தேன். அந்நியமாதலை விளக்குவது என் நோக்கம். ஒரு மனிதன் எத்தகைய சமூக, குடும்பச் சூழலில் அந்நியமாகிறான் என்பதையும், இதன் பிடிப்பிலி-

ருந்து மனிதன் தன்னை விடுதலை செய்துகொள்ள எப்படி முயற்சி செய்கிறான், இத்தகைய முயற்சிக்கான ஆதாரத்தை எங்கிருந்து, எப்படிப் பெறுகிறான், பெறவேண்டும் என்பதையும் கவிதையில் வெளிப்படுத்த விரும்பினேன். முற்றான அந்நியமான நிலையில் தேவராஜ் வாழ்வின் எல்லையிலிருந்து வெளியேறினார். தனிமனிதன் என்ற முறையில் அவர் தேர்வை நான் குற்றம் சொல்லமாட்டேன். சமூக மனிதன் என்ற நிலையில் தற்கொலை ஒரு தீர்வாகாது. அந்நியமாதலின் குரூரத்திலிருந்து தன்னை மீட்டுக்கொள்வதற்கான ஆதாரம், சமூகத்திற்குள், வரலாற்றிற்குள் இருக்கிறது.

அந்நியமாதல் என்ற பிரச்னை, மார்க்சியத்தின் மையப் பிரச்னை. இதை எங்களுக்குத் தெளிவுபடுத்தியவர், எங்கள் மதிப்பிற்குரிய தோழர் எஸ். என். நாகராஜன். அவரோடு தொடர்ந்து நடத்திய விவாதங்களிலிருந்து, அந்நியமாதல் என்ற நிகழ்வுப் போக்கிலிருந்து, மனிதன் - சமூக மனிதன் தன்னை— சமூகத்தை எப்படி விடுவித்துக்கொள்ளவேண்டும் என்பதுபற்றிய தெளிவு ஏற்பட்டது.

கவிதையில் வரும் முத்து, அந்நியமான நிலையிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ளும் பாதைக்கு வந்துசேர்கிறான். அவ்வளவில் கதையை முடித்துக்கொள்கிறேன். இதற்கேற்றவாறு சில நிகழ்ச்சிகளை நான் கற்பனையிலிருந்து படைத்துக்கொண்டேன். இந்த நிகழ்ச்சிகள் யதார்த்த வாழ்விற்குப் பொருந்தியவைதான். அந்நியமாதலிலிருந்து முற்றாக விடுபடும் நிலை, நம் சமூக நிலையில் சாத்தியமில்லை. சோசலிசம் முதலிய கட்டங்களைக் கடந்த நிலையிலேயே அது பெரும்பாலும் சாத்தியமாகலாம்.

தேவராஜின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், எந்த ஓர் இடத்திலும் அவர் வாழ்வில் நிகழ்ந்த அதே வடிவில் என் கவிதையில் இடம்பெறவில்லை. இந்தக் கதையாக்கத்திற்கு தேவராஜ் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில, தூண்டுதலைத் தந்திருக்கின்றன. வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படைப்பாக்கும்போது பொதுமைப்

படுத்தல் என்ற முறையில் இங்கு அவை கதை நிகழ்வுகள் ஆகின்றன.

கல்லிகை ஆவேசத்தோடு ஒரே மூச்சில் எழுதப்பட்ட கவிதை. இது அப்படியல்ல. நிதானமாக நிகழ்ச்சி விவரிப்புகளோடு, நிகழ்ச்சிகள் வெறும் விவரிப்புகளாகப் போய்விடக் கூடாதே என்ற கவலையுடன் உருவாக்கப்பட்டது. இதன் விளைவை இன்று பார்க்கிறேன். பல இடங்கள் கவிதையாக இல்லை. அல்லது, கவிதை பல இடங்களில் நீர்த்து உரை நடைத் தன்மையதாக இருக்கிறது. இம்மாதிரி இடங்களில் கவிதைத் தன்மையை ஏற்றுவது வெற்றலங்காரமாக முடியும். இந் நிலையில் என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்— கவிதையின் ஒட்டுமொத்தமான பாதிப்பு- விளைவு என்னவாக இருக்கும்? ...இருக்கிறது?

அந்நியமாதல் என்ற பிரச்னை, நிகழ்ச்சி விவரிப்புகள் கற்பனைகள் வழியே வாசகர் மனத்தில் சென்று தைக்குமா? அவர்கள் மனத்தினுள் தாமும் அந்நியப்பட்டிருக்கிற நிலை பற்றிய உணர்வைக் கிளறுமா?..தைக்கும், கிளறும் என்று நம்புகிறேன். இதுபோதும், இதுவே சரி என்று கருதுகிறேன்.

இத்துடன், இன்னொன்றையும் கூறவேண்டும். வானம் பாடிக் கவிஞர்களிடத்தில் சோதனை முயற்சிகள் குறைவாக வே இருந்த சமயத்தில்.,இம்மாதிரிச் சில சோதனைகளில் நான் ஈடுபட நேர்ந்தது. ஒருவேளை இக்கவிதை எழுதப்பட்ட காலத்திலேயே வெளியிடப்பட்டிருந்தால், இம் முறையில் மேலும் சிலராவது நல்ல படைப்புக்களைத் தந்திருக்கக்கூடும். பத்து, பன்னிரண்டு ஆண்டு கழித்துப் பார்க்கும்போதும், அந்நியமாதலைக் கருப்பொருளாகக் கொண்ட கவிதை முயற்சி கள் இல்லை. இந்நிலையில் இக்கவிதையை வெளியிடுவது தேவைதான் என்று கருதுகிறேன்.

இக்கவிதை எழுதப்பட்ட காலத்தில் எஸ். வி. ராஜதுரை யின் நூல் முயற்சி இல்லை. இன்றும் கூட எஸ்.வி. ஆரின்

நூல் படிக்கப்படுவதில்லை. படிக்கப்படாததோடு, அந்நிய-மாதல் என்ற கோட்பாடு, மார்க்சியத்திற்கு எதிரானது என்ற அதிதீவிர-இளம்பிள்ளைவாதக் கருத்தோட்டமும் இன்று நிலை பெற 'முயற்சி' நடைபெறுகிறது. சமூக மாற்றத்திற்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளும் குழுக்களும் தமக்குள் இறுகிப்போன நிலையில், இவ்வகை 'முயற்சிகள்' நடைபெறுவதில் வியப்பில்லை. சமூக முரண்பாடுகள் கூர்மை யடைந்து வரும் நிலையில், கட்சிக்குள்ளும் குழுக்களினுள்ளும் அந்நியமாதல் என்ற நிகழ்வுப்போக்கு இவற்றோடு தொடர்பு உடையவர்களைக் கூர்மையாகப் பாதிக்கிறது. நாங்கள் அப் படி இல்லை என்று இவர்கள் உரக்கச் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. கூர்ந்துபார்த்தால், தமக்குள்ளும் இவர் கள் சிதைவுபட்டிருப்பது- பின்னப்பட்டிருப்பது- பின்னங்களில் சிதைந்து கேவலமான உடைமைச் சமுதாயத்தின் தீய குணங் களால் இவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதை இவர்கள் அறிய முடியும். உடைமைச் சமூகம் தமக்குள்ளும் வெற்றிபெற்றுவரும் கோரத்தை இவர்கள் சரிவர அறியவரும் நிலையிலேயே, இவர்களின் போராட்ட உணர்வு, உரம்பெறும்; வளம்பெறும். இவர்களில் சிலர் குறிப்பிட்டதொரு கட்சியில் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டதன் மூலமே அந்நியமாதலைக் கடந்து விட்டதாக பொய்யாக நம்புகிறார்கள். அதுபோலவே புரட்சி நடைபெற்ற நாடுகளில் அந்நியமாதல் கடக்கப்பட்டதாக நம்பித் தமக்குத்தாமே திரையிட்டுக் கொள்கிறார்கள். இவ் வகைப் போலி முயற்சிகள், சமூகமாற்றத்தில் பின்னடைவு களையே ஏற்படுத்தும் என்பதை இவர்கள் அறியவில்லை. இத்தகைய சூழலைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, அந்நியமாதல்பற்றிய என் கவிதை முயற்சி எத்தனை சிறிய அளவினது என்பது புரிகிறது.

'கல்லிகை' 'எனக்குள் ஒரு வானம்' இரண்டையும் திரும்பப் படித்துப் பார்க்கும்போது ஓர் அதிர்ச்சி.. என் வாழ்க்கை அனுபவங்கள் கவிதைக்குள் நான் அறியாமலேயே நுழைந்திருப்பது தெரிகிறது, அதேவடிவிலும் உருமாறியும். தேவராஜ் பற்றிய கவிதையில் சற்று வெளிப்படையாகவும்,

'கல்லிகை' யில் ஆழமாகவும், அழுத்தமாகவும். எந்த அனு பவங்கள், எந்தவடிவில் கவிதைக்குள் என்று நான் சுட்ட வேண்டியதில்லை. வாசக நண்பர்களும் இவற்றைத் தேட வேண்டியதில்லை. கவிதையாக்கம் இப்படி நடைபெறுகிறது என்பதைச் சுட்டவே இங்கு இதைக் குறிப்பிடுகிறேன். ஒரு படைப்பாளியின் வாழ்க்கை அனுபவத்தின் சாரத்திலிருந்தே படைப்பு வேர்பிடித்து விளைகிறது என்பதாக நாம் பொது விதி செய்துகொள்ளமுடியும். இது எல்லாக் கவிதைகளுக்கும் எல்லாருடைய கவிதைக்கும் முற்றாகப் பொருந்துமா என்பதை நாம் நிதானமாக ஆராய்ந்து முடிவு செய்யலாம்.

என்னை நான் அந்நியமான நிலையிலிருந்து மீட்டுக் கொண்டது, தேவராஜ் பற்றிய கவிதையில் கூறப்படுகிற முறையிலிருந்து வேறுபட்ட ஒருமுறையில் என்று நான் கருது கிறேன். இன்றும்கூட முற்றாக என்னை மீட்டுக்கொண்ட தாக நான் நம்பவில்லை. அடிக்கடி, புதிய புதிய சூழல்களில், புதிய பிரச்னைகள் முகத்தில் எறியப்படும்போது, நேற்று வரை இனித்த உறவுகள் இன்று சிதைந்து நொறுங்கும் போது, அவதூறுகள் என்மீது அடுக்கப்படும்பொழுது, அந்நியமாதல் என்ற நெருப்பில் கருகி...அப்பொழுதெல்லாம் இந்த நெருப்பிலிருந்து விடுபடுவேனா என்ற வேதனை முழு அளவில் என்னைத் தாக்குகிறது. அப்பொழுதெல்லாம் சாவு எத்தனை பெரிய விடுதலையாகக் காட்சி தருகிறது! மீண்டும் தீவிரமான தேடல்கள்! எனக்குள் கொந்தளிக்கும் வேதனை களுக்கான மூலம் எனக்குள் இருப்பதுபோலவே புற உலகிலும், சமூகச் சூழலிலும் இருப்பதை அறிந்து, வரலாற்று நீரோட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நாம் இருப்பதை அறிந்து, அதில் கலந்து, தொடர்ந்து புதிய உண்மைகளும் புதிய ஆற்றல்களும் நமக்கு வசப்படும்போது...அப்பா! எத்தனை நிம்மதியாக இருக்கிறது! நெருப்பில் புடம்போட்ட நிம்மதி இது. இந்த நெருப்பு தேவையான நெருப்பு. இந்தச் சமூகச் சூழல் நமக்குள் இந்த நெருப்பை ஏற்றவில்லையானால் நமக்குள் எங்கிருந்து வெளிச்சம் வெளிப்படும்!...இப்படியாக வாழ்க்கை இயங்குகிறது, எனக்கு உள்ளும் வெளியிலும்.

இந்த உண்மை எனக்குமட்டுமா? எல்லாருக்கும் பொருந்தியது தான்! நெருப்பில் பூத்த இம்மலர்கள் படைப்பாளிகளாக உள்ள எல்லோர்க்கும் சொந்தம். மனிதர்கள் எனப்படுவோர் இத்தகைய மலர்களைச் சூடிக் கொள்பவர். புதியது படைக்கும் எல்லோரும் மனிதர்கள்: கலைஞர்கள்.

இவ்வளவு எழுதியபிறகு...எனக்குள் ஒரு கேள்வி எழுகிறது. ஒரு கவிதைத் தொகுப்புக்கு இத்தனை விரிவான ஒரு முன்னுரை தேவையா?...தேவைதான் என்று நான் திடமாக நம்புகிறேன். தமிழில் புதுக்கவிஞர்கள் பலருடைய கவிதைகள் புரியவில்லையே! என்று திறமான வாசகர்களும் சிலசமயம் விமர்சகர்கள் என்று தம்மைக் கருதிக்கொள்வோரும் குறைப்பட்டுக் கொள்வதையும் குற்றம் சாட்டுவதையும் பார்க்கும்பொழுது, அவ்வாறு குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் கவிஞர்கள் ஏன் தம் கவிதைகள் பற்றி எழுதவில்லை, எழுத மறுக்கிறார்கள் என்பது புரியவில்லை. சிக்கலான கவிதைகளும் வாசகர்களிடம்-மக்களிடம் போய்ச்சேரவேண்டும். வாசகர்களின் கலைத்தரம் சிறக்கவேண்டும். கலையும் இறுதியில் மக்களின் பண்பாட்டுத் தரமும் சிறக்க இந்த நெறி தேவை. ஞானக்கூத்தன், கலாப்ரியா முதலியவர்கள் இப்படித் தம் கவிதையாக்கத்திற்கான வாழ்க்கை அனுபவம், அனுபவச் செரிப்புக்கான பார்வை முதலியவைபற்றி எழுதியிருக்கவேண்டும். இவர்களைப் போலவே இன்னும் சிலரும். தம்மைத் தாமே பாராட்டிக்கொள்வதற்காக அல்ல. தம்மைப்பற்றிய விமர்சனத்திற்கும் வழி திறந்து வைப்பதற்காக. விமர்சனங்களால் கலை செத்துவிடாது. நாளடைவில் செழிக்கும்.

எந்த ஒரு சீரிய படைப்பும், அது படைப்பாளியை வாசகர்களுக்கு வெளிப்படுத்துவதோடு, படைப்பாளிக்கே தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறது. அதுபோலவே, ஒரு படைப்பு உருவாகும்போதே, படைப்பியக்கம் படைப்பாளியை முன்னைய நிலையிலிருந்து மேலும் உயர்நிலை நோக்கி இயங்குபவனாக உருவாக்குகிறது. இந்த இயக்கம் படைப்பாளியை முன்னுக்குத் தள்ளிவிட்டுத் தான் பின்தங்கி

விடவும் கூடும். அதாவது ஒரு படைப்பாளி தன் முன்னைய படைப்பின்வழியே உருவாகி வளர்ந்து அதனைக் கடந்தும் சென்றுவிடுகிறான். இத்தகைய ஒரு படைப்பைச் சீரிய முறையில் எதிர்கொள்ளும் வாசகர்க்கும் திறனாய்வாளர்க்கும் இங்குக் கூறிய உண்மை பொருந்தும். படைப்புக்களைத் திறனாய்வு செய்வதன்மூலமும் ஒரு திறனாய்வாளன் தன்னை வெளிப்படுத்துகிறான்: அறிந்துகொள்கிறான்: தன்னைக் கடக்கிறான். சீரிய வாசிப்பும் திறனாய்வும் இதற்காகவும் தேவைப்படுகின்றன.

இறுதியாகச் சில:

நான் எழுதிய கவிதைகளுள் இத்தொகுப்பில் இடம் பெறுபவை, இரு நீண்ட கவிதைகள்-குறுங்காவியங்கள். பிற கவிதைகள் பிறிதொரு சமயம் புத்தக வடிவம் பெறலாம். பெறாமலும் போகலாம்.

இத்தொகுப்பில் இரு குறுங்காவியங்கள்— (குறுங்காவியங்கள் என்று இவற்றைக் குறிப்பிடுவது சரிதானா? வேறு பெயர் சொல்ல இயலாத நிலையில் ஒரு வசதி கருதி இவ்வாறு குறிப்பிடுகிறேன்) இடம்பெறுகின்றன. என் பெயரோடு சார்ந்து ஏற்கனவே அறிமுகமானது 'கல்லிகை' என்பதால் இப் பெயரை இத் தொகுப்பிற்கு இட்டிருக்கிறேன். இதுவும் ஒரு வசதி கருதித்தான்.

என்னுடையவை, கவிதைகள்தானா? கவிதைகள் என்றால், இவற்றின் தரம் யாது? இத்தகைய கேள்விகள் எனக்குள், எப்போதும். என்னைப்போலவே வாசக நண்பர்களும் அவரவர்க்கான கவிதையை அவரே தேர்ந்துகொள்ள வேண்டும்.

வழக்கமாக ஒரு படைப்பை யாருக்காவது காணிக்கை யாக்கும் மரபு என்முன் நின்று என்னை உற்றுப்பார்க்கிறது. நான் என்ன பதில் சொல்ல?! என்னை உருவாக்கிய எத்தனையோ பேர்களை நினைத்துப் பார்த்து என் நன்றி உணர்வை முழுமையாக வெளிப்படுத்த இயலாமல் திணறு கிறேன். என் மரியாதைக்குரிய தந்தை, அன்பான என் தாயார், எனக்காகத் தங்கள் கல்வியைத் தியாகம் செய்த என் சகோதரர்கள், சகோதரிகள், வாழ்க்கையை எனக்கு வசதியாகச் செய்துதர நாளும் உழைக்கும் என் துணைவி, என்னிடம் அன்பைப் பெருக்கும் குழந்தைகள், எனக்கு அன்பை வாரி வழங்கும் என் நண்பர்கள், என்றும் என் வணக்கத்திற்குரிய ஆசிரியப் பெருந்தகைகள்... இப்படியே நினைத்துப் பார்க்கும்போது இந்தச் சமூகம்— வரலாறு— பிரபஞ்சம்வரை என் நன்றி உணர்வு விரிகிறது. என்னோடு உறவு கொண்டும் பகைத்தும், எனக்கும் மகிழ்வைத் தந்தும் வேதனையை ஏற்படுத்தியும், இவற்றின்மூலமாகவெல்லாம் என்னை உருவாக்கிய — வளர்த்த எல்லோர்க்கும்... என் கண்ணீர் கலந்த நன்றிகள் உரியவை. என்மீது அனலைக் கொட்டும் எரிமலைகளுக்கும், என்னை அன்பால் குளிரவைக்கும் நீரோடைகளுக்கும் சரிசமமாக என் நன்றிகள்.

வாசக நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்கள் கலை உணர்வையும் பார்வையையும் தீட்டிக்கொள்ள... முடியுமானால் வளர்த்துக்கொள்ள... உங்கள் அனுபவங்களைத் திரட்டி ஒரு பார்வையில் பார்த்துக்கொள்ள.. கடந்து செல்ல இந்த நூலும் ஒரு வாய்ப்பாகலாம். கடந்துசெல்ல முடியுமானால்... அதை விரைவில் செய்யுங்கள்... அதுவே என் கவிதைத் தொகுப்புக்கு நீங்கள் செய்யும் 'மரியாதை'.

நூலை அழகாக அச்சிட்டு வெளியிடும் பிரதிபா பதிப்பகத் தார்க்கு சிறப்பு முறையில் நன்றிகள் உரியவை.

அதுபோலவே கருத்துரை வழங்கிய நண்பர்களுக்கும்.

ஞானி

10 9 1984

உள்ளே...

அறிமுகம்

யார் காலத்தின் சரியான சாட்சியாகத் தலை நிமிர வேண்டுமோ— எவன் பூமியின் தாகத்தைப் பிரகடனப்படுத்த வேண்டுமோ— அவன், பெயரை விளம்பரப்படுத்தும் சில்லரை சாட்சிகளைத் தேடிக்கொண்டும், சொந்தக் கனவுகளின் பலவீனங்களோடு மல்லாடிக்கொண்டும் இருக்கிற நாளில்— மானுடம் பாடும் வானம்பாடிகளின் கவிதா மண்டலத்தில் சமூக ஞானியாக வலம் வந்த இந்த மனிதனைக் கவிஞனாக உருவாக்கியிருக்கிறது இந்தக் காலகட்டம்.

இது— தமிழ்க் கவிஞர் வரலாற்றில் ஒரு படிப்பினை-யையும், தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு திருப்புமுனை-யையும் கசடறக் கற்றுத்தர வந்திருக்கிறது.

'தத்துவம் வேறு— கவிதை வேறு' என்ற சிறுபிள்ளைத் தனமான நபும்சக வாதங்களை, இந்தச் சிருஷ்டியின்மூலம் தகர்த்திருக்கிறார் கவிஞர் ஞானி.

'கவித்வம் இல்லாமல் தத்துவம் இருக்கமுடியும், ஆனால் தத்துவம் இல்லாமல் கவித்துவம் இருக்கமுடியாது' என்பதை இந்தக் கவித்துவ கனமேறிய படைப்பின்மூலம் நிரூபண-மாக்கியிருக்கிறார்.

வரலாற்றில் உடைமையும் உழைப்பும் பிரிந்தநிலையில் — ஆதிக்கமும் அடிமைத்தனமும் ஏற்பட்ட நிலையில் — உடலும் உள்ளமும் பிளவுண்ட நிலையில் — ஆணும் பெண்ணுமாக மனிதன் சிதைந்த நிலையில்— தெய்வங்களும் பேய்களும் விரிந்த நிலையில் இவை ஒவ்வொன்றிலும் மற்றதன் உண்மை சிக்கித் தவித்த நிலையில் மனிதனின் அவலமே இந்தப் படைப்பாகக் கிளைகள் விரித்திருக்கிறது. இந்த முறையில் அகலிகை வரலாற்றின் ஆத்மாவாகிறாள்.

மனித வரலாற்றில் ருசுப்பிக்கப்படாத நிகழ்ச்சியொன்-றைக் கருவாக்கி அந்த மனித வரலாற்றை முக்கால நோக்கோடு தந்துள்ளார்.

ஆம்! சக வானம்பாடி சிற்பி எழுதியதைப்போல அகலிகை இன்னும் காத்துக்கொண்டுதான் இருக்கிறாள்.

புதுக்கவிதை வாலாற்றில் கல்லிகை ஒரு முத்திரையைப் பொறிக்கவந்துள்ளது.

— அக்கினிபுத்திரன்

கல்லிகை

நான் கல்லாகிக்கொண்டிருக்கிறேன்..

மனித வடிவினர் என்னைத் துரத்துவதால்
அவர்கள் எல்லையிலிருந்து ஓடி
ஓட ஓடக் கல்லாகிக்கொண்டிருக்கிறேன்...
எத்தனையோ முறை என் நரம்புக்கொடிகளில்
நானே முடிச்சிட்டு...முடிச்சிட்டு...
என் உணர்வுகள்
என்னையே எட்டாமல் கட்டிவைத்திருந்தேன் —
இன்று...
இதயத்தில் செருகியிருந்த கத்தியை எடுத்து
நரம்புப் பின்னல்களை அறுத்துக்கொள்கிறேன்.
என்னுள் உலகைப் புதைத்த நான் —
இன்று...
என்னையே எனக்குள் புதைத்துக்
கல்லறை யொன்றைக் கட்டிக்கொள்கிறேன்.

எனக்கு நேர்ந்த கொடுமையை....
எப்படிச் சொல்வேன்?

o o o o

எனக்கும் எந்தப் பிறப்பிலோ
மனம் என ஒன்று இருந்ததாக நினைவு

தாயின் அணைப்பில்..தந்தையின் அறிவில்..
தோழியர் ஆட்டத்தில்.. தோகைகள் கூட்டத்தில்..
உறவின் நெருக்கத்தில்.. உறவின் இளகலில்..
முளைவிட்டுக் கிளைத்து —
வானப் பரப்பில்.. வளர்சோலை அழகில்..
ஆற்றின் ஓட்டத்தில்.. அருவியின் ஓசையில்..
காலை ஒளியில்.. கதிரவன் எழுச்சியில்..
மாலை வெயிலில்.. மதியின் மயக்கத்தில்..
இடியின் வெடிப்பில்.. மின்னலின் வெட்டில்..
வறண்ட வானில்.. வயிற்று நெருப்பில்..
சாவில்..நோவில்..
மொக்குவிட்டுப் பூத்தது என் மோக மனமலர்.

அந்தமலரை —
அந்தக் கொடியோடு சேர்த்து என்ன செய்தனர்?
எதிர்காலக் கனவு நறுமணத்தைச் சுமந்து
புன்னகைத்த என்மனத்தை
உடற்கொடியோடு சேர்த்து
தானமளித்தனர் தாய்தந்தையர்.
நல்லதோர் தவமரத்தில் பற்றிப்படர எண்ணி..
கட்டித்தழுவினேன்!
ஓ..கையறுபட்டேன்!

எனக்குத் திருமணம்..!

இந்நினைவே எனக்குக் கசக்கிறது!
திருமண நாளில் மணவறையில்..
இடப்பட்ட வேள்விப்புகை மூட்டம்
என்வாழ்வில் எப்படியோ கப்பிக்கொண்டது!
எத்தனையோ பெரியோர்
தங்கள் வாழ்வின் ஏமாற்றக் கனலை
வாழ்த்து மாலைகள் என்ற பெயரில்
சொல்மலர்களுக்குள் மறைத்து என்மீது தூவினால்-
எத்தனை நேரத்திற்கு இதன் குளிர்ச்சி நிற்கும்?

அந்த முதலிரவு..

மந்திரம் ஓத அமர்ந்தவர்
யோகத்திலேயே உறங்கிப்போனார்..
காலம் என் கண்ணீரில் வறண்டு மறைந்தது.
நான் ஆசையோடு வளர்த்துவந்த
என் ஆன்மக் குழந்தையை முதலிரவிலேயே
கொன்றுபுதைத்த கொடியவன் காலையில்
தன் யோகத் திறத்தை மெச்சியபடியே
தாடிக் காதலியைத் தடவிக்கொடுத்தான்
இந்திரனுக்கெதிராக எடுத்தபோரில்
முந்த நின்ற முனிவனல்லனோ!

என் கணவன்
மானோடு ஓடவிரும்பிய என் கால்களில்
மந்திரக்கயிறு பூட்டினான்!
காடெல்லாம் சுற்றிவர விரும்பிய என்னை —
குடிசைக்கொட்டிலில் கட்டிப்போட்டான்
பருத்தியாடைப் பரிசு கேட்டபோது —
தழையாடைத் தண்டனை நல்கினான்!
மனக் கொடி வீட்டைக் கட்டும்போது —
வேதப் படையால் வெட்டிப்போட்டான்!
தெய்வமே...! என நான் புழுங்கியபோது —
கல்லையும் புல்லையும் நட்டுவைத்தான்!

ஓ..! அந்த வசந்த ருதுவாம் இளமையின் விடியலில்
நான் எவ்வளவோ கேள்விப்பட்டேன்!

இந்திரன்!
இவனைப்பற்றியே எங்கும் பேச்சு!
குறுங்காட்டுக் குழுக்களிடையில்
நிலம் பிளந்தோடும் நெடிய ஆறாக
இவன் படைகொண்டெழுந்தான்.
புதர்களை வெட்டப் 'புஸ்' ஸெனச்சீறும்
பாம்புப் படையாய் மறவர் வெகுண்டனர்.
உலக வாழ்வை உதறி எறிந்து
வீரவாழ்வை விளையாட்டாக்கினர்
இந்திரன் படை ஏற்றிய தீயில்
காடே எரிந்து கருகியதோடு
மறவரும் சாம்பலாய் மண்ணை மூடினர்.
தனியரசாகிப் பவனி வந்தான் இவன்.
வச்சிரப்படையானின் எண்திசைக் கைக்குள்
மாட்டிக்கொள்ளாமல் காட்டு வேலிக்குள்
ஓடி ஒளிந்தனர் எம்மவர்.
இதயக்காட்டை விரிவிடம் ஆக்க
வேள்விப் புகையால் மூடிக்கொண்டனர்!

நிலத்தைக் குடைந்து இரும்பைக்கண்டு
ஆற்றை மடக்கி வயலிற்பாய்ச்சி
காளையைக்கட்டி ஏரில்பூட்டி
வித்துகள் தேடி விளைவைப் பெற்று
ஆடைபுனைந்து அணிகலன் செய்து
வீட்டையமைத்து வியன்நகர் கண்டு
தேட்டைப் பெருக்கிய தேவேந்திரனை
எம்மவர் பேயாய்ப் பிசாசாய் நாயாய் நரியாய்
எள்ளித்தள்ளினர்! இவனால்—
உலகமே உருவிழந்தழியும் என்று பேசினர்

அப்போது நான் ஆறுவயதுப் பேதை!
எங்கள் குடில்கள் இருட்காட்டில் இருந்தன.
ஆற்றுக்கப்பால் திறந்தவெளியில்
வயல்வெளிக்கிடையில் புதியதோர் உலகம் பூத்தது
இருவேறுலகங்கள் எதிரெதிர் நின்றன.
எங்கள் விழிகளில் எவ்வளவுதான் கறுப்பு மை பூசி
காட்சிகளை இருட்டடிக்க எம்மவர் விரும்பினும்
எங்கள் இதயநிலவில் எழில்மிகு காட்சிகள் எதிரொளித்தன!

ஓ..! நான் என்ன ஆனேன்..?

என் ஆசைக்கொடிக்கு வேரிலே வெட்டு
முனிவனது வேள்விக் கட்டிடத்தில் நானொரு செங்கல்
இடையறாது எரியவிடும் தீயைத் தூண்ட நானொரு கோல்
வேள்வி செய்யவே பிறந்தவனின் உடலுக்கு நானொரு அங்கம்
என் ஆத்மாவிற்கு இவ்வளவுதான் ஆயுளா?

இவன்
மந்திர மொழியை வாயில் அரைத்து,
வேள்வியில் இதயத்தை வேகவைத்துத் தின்று,
உடலக்கூட்டை உயிர்க்கயிற்றில் கட்டி
இழுத்துத் திரியும் எந்திரம்!

இந்தக் கபாலிக எந்திரத்தின்
ஞானக்கோடரிக்குக் கிடைத்தது என் கழுத்து!
அங்கும் இங்கும் அசைக்க முடியாதபடி
இறுகப் பற்றி என்னமாய் வெட்டினான்..!

•

நான் பட்ட பாடுகள்..

எத்தனைமுறை அவனை இழுத்திழுத்து அணைத்திருப்பேன்..
எனது தாகக்குளத்தில் மூழ்கடித்துக் கொன்றிட
கனத்த கல்லை நெஞ்சில் கட்டிக்கொண்டு
ஒவ்வோர் இரவும் உலவிவந்தேன்..

இவனோ —
புரியவிழ்ந்த கயிறாய்..திரிந்துவிட்ட பாலாய்..
ஞானக்குளத்தில் நனைந்துகிடந்தான்..
அடங்கிப்போன இவனுக்கு மூச்சுக்கொடுத்து
உடலுக்குக் கணப்பூட்டி எழுப்பிட
என்னசெய்தும் முடியவில்லை..என்னால்..
என் இதயத்தை எடுத்துப் படுக்கையில் கிடத்தி
எத்தனை இரவுகள் வைத்தியம் பார்த்தேன்..
இளைப்பு நோய்கொண்ட இதன் பொருமலைத்
தணிக்கமுடியாமல் தவித்துக் குழம்பினேன்.

ஒரு நாள் கேட்டேன்..

'வேதமாவது கற்றுத்தருக..
உங்களைப்போலக் கிளிப்பிள்ளை ஆகிறேன்..
நீங்கள் தரும் நெல்லின்புத்திலேயே உறங்கிப்போவேன்
வேள்வி வளர்க்க அனுமதி தருக!
காமச்செடியைக் கருக்கிவிட்டால்..
ஓமக்கொடிதான் உயர வளருமே..!
பலமுறை கேட்டேன்..பதில் என்ன தந்தான்?
பேதைப் பெண்ணுக்கு ஆன்மத்தேவை வேண்டாம்!
ஆன்மா கனக்கத்தொடங்கினால்..
அந்தச் சில்லறையைக் காப்பதே கடமையாகிவிடும்.

ஆற்றங்கரையில் ஆசிரமப் பெண்கள்
நீராடக் கூடியபோது நெஞ்செரியப் பேசினோம்..
எம் குழந்தைகள் மூலம்
மண்ணில் வேர்பிடித்திருந்த எம்மால்
வேரை அறுத்துக்கொண்டு
விண்ணில் விளையாட முடியவில்லை.
விரிந்துவரும் உலகப் பரப்பை
இதயத்தில் மூடிவைத்து
மூன்றே முக்கால் நாழிகையில்
உலகமே காய்த்துக் கொட்டும் என்ற
மோடிவித்தையை நம்ப எம்மால் இயலவில்லை.
எம் குழந்தைகள் மூலம்
எதிர்காலம் இருண்டுவந்தபோது—
விளக்குகளைத் தேடினோம்..
அவை..ஆற்றின் மறுகரையில்
சின்ன விழிகளைச் சிமிட்டிக் காட்டின
மழலைமொழிப்பூக்கள் கிளைக்காத
மொட்டை மரமாய் நான்..

விண்ணுக்கும் வேதனையாய்..
மண்ணுக்கும் பாரமாய்..

காலவெளியிலே வீணே நின்றபோது
ஆசைக்கிளைகள் விரிந்து பெருத்தன..

இவன் எப்போதோ ஒரு முறை
என்னை.. நெருங்கினான்.. அது.. எப்போது..?
தவப்பயனை மனயானை அழித்து மருட்டும்போது
தன் உடல் காப்புக்கு என் மேனிமலையில் ஏறிக்கொள்வான்
அதுவும்..முன்னிரவில் உரிமையோடு வாராமல்
நள்ளிரவில் திருடனாக வந்து..
என்னைக் கேட்பானா..மாட்டானே..
மேனிமலையில் ஏறி..
நாகப்பாம்பாய் முகம் தூக்கி
ஒருசில முறை ஊதித்தள்ளி
விஷ்வித்தை உடலில் தூவி இறங்கி ஓடி...
மனக்குகைக்குள்ளே மறைந்துகொள்வான்
காலையில்..
வேதத்தை வேகமாய் விசிறுவான்!

ஞானவேள்வி நடந்தது..

என் மனத்தில் ஆசைப்புயல் ஆர்த்தெழுந்தது!
ஆசைப்புயல் அடித்தடித்துத்
திமிர்ந்துகிடந்த என் தசைத்தீயை
எந்த நாய்க்கு முன்னரும்
எடுத்தெறியத் தயாரானேன்.
அந்த நாய் தனது கருக்கரிவாள் பல்லில்
என் தசைத்துண்டைக் கடித்துக் குதறுவதில்
சொர்க்கத்தையே துய்த்திடலாம் என்று துடித்திருந்தேன்.

அப்போது என்றுமில்லாததொரு பரபரப்பு..!

இந்த முனி வேடர்கள்
எந்தப் பறவையை எத்தனைப் பறவையைப் பிடிப்பதற்கு
இத்தனை வேகமாய் வேள்வித்தீ வலையை முடுக்குகிறார்கள்?
இவர்கள் வேதமொழிகளுக்கு இத்தனை கம்பீரம் எப்படி வந்தது?

காற்றில் கலந்த புகைக் கனத்தால்
மூச்சுத்திணற முனிவர்குலப் பெண்கள் கேட்டுக்கொண்டோம்
கிடைத்தது ஒரு பதில்:
காட்டுவழிகளில் ஊர்வலம் நடத்தி
கிட்டிய பொருளெலாம் தனதென்று இந்திரன்
முத்திரை குத்துகிறானாம்!
வேள்விக்களத்திற்கு விரட்டிவரும் மாடுகளை
தடுத்து நிறுத்தி —
தன் வயற்புறங்களில் ஏரோட்டுகிறானாம்...!
காட்டு மனிதரை வேட்டையாடி
விரிந்த வயல்களில் உழைக்கவைக்கிறானாம்.
இந்த அடிமை மாடுகள் கலகம் செய்கையில்...
வச்சிரப்படையால் வாகை கொண்டானாம்!
வேதவாழ்வை மிதிப்பதற் கென்றே
ஆசிரமங்களை அழிக்கின்றானாம்;
இவனுக்கெதிராக
எத்தனை வேள்விப்படையை விடுத்த போதிலும்
இடியைப் படைகொண்டான் இளைத்திடவில்லையாம்;
தெய்வங்கள் இவனைத் தீய்த்திடவில்லையாம்,
கடவுளர்க் கிடையில் கலகங்கள் வந்ததாம்;
திசைக்கொன்றாகச் சிதறி நின்றனவாம்;
இவர்களை இணைத்து...வளைத்து
ஏவல்கொள்ள ஒருவர் வேண்டுமாம்;
ஊர்போற்ற ஈடுஇணையற்ற ஒருவர் தலைமையில்
கடவுட் படைதான் திரண்டாலொழிய
வெற்றிக்கு வேறு வழியேயில்லையாம்!

வேதவேள்வி மந்திரங்களால் விண்ணை நிறைத்தனர்
ஆடுமாடுகளாக எங்களை
அழ அழ வெட்டி வேள்வியிலிட்டனர்...
எங்கள் மனித உடலின் மதுவை அருந்தியவாறே
அமுதம் காய்ச்சி வடிக்க இதயத்தைப் பிழிந்தனர்...
எங்கள் சோக விழிகளில்...
கண்ணீர்த்திரியிட்டு விளக்கேற்றி வைத்து
விடிய விடிய சொர்க்கத்தின் வழியைத் தேடலாயினர்

ஒரு நாள்..

இவன் வளர்க்கும் ஞானமரத்தின்
வேரடியைக் கல்லி
அங்கு அரித்துவரும் புழுக்களைப் பார்க்க விரும்பினேன்
இவன் கூறினான் —
''இதயத்தில் ஒரு மன்னனை எழுப்பிக்கொள்வேன்
என் சிந்தையை...கைகால்களை
அவனது தேரில் கட்டிக்கொள்ள விரும்புகிறேன்
இதற்காகவே சிந்தனைக் குகையில் தவமிருக்கிறேன்.
இன்பப் புதையலை எடுப்பேன் நான்!
சொர்க்க சுகத்தைத் துய்த்திடுவேன் நான்!''

நான்! நான்! நான்!
ஆணவக் கொழுப்பைத் தீயிலிட்டு எரிப்பதைவிட்டு
ஞானக் கொழுப்பை நாடும் மேதை!
அடிமைத்தளையை விடுதலையாக
விளையாட்டுக் காட்டும் வித்தகன்!
அன்றியும்...இந்தக் கழுதையும்
இன்பப் பொதிக்கா தவம் செய்கிறது?
இன்று வேண்டாமெனக் கைமறித்து
இன்ப மதுவை நெடுங்காலம் வைத்து நெடியேற்றி
குடித்துக் கூத்தாடும் கோமாளியா இவன்!
இவனுக்கு விடுதலை இவ்வுலகில் இல்லை!
என் இதயம் செத்து, செத்தபிணத்தை
மஞ்சளிட்டுக் குளிப்பாட்டி மலர்களிட்டு மணமூட்டி
பாடை கட்டி உலக ஊர்வலமாய்த் தூக்கிநடந்தேன்

எங்கள் இல்லத்தில்தான் இப்படி ஒரு படி என்பதில்லை
எல்லாவீடுகளிலும் ஈர விறகிலிருந்து இப்புகையே எழுந்தது..
மனத்தின் மூலைகளில் மண்டிய ஒட்டடை வலைகளைக்
கலைக்கும் முயற்சியைக் கைசலித்து விட்டோம்.

ஆம்!
இரும்பு உடலுடன் கரும்பு இதயத்துடன்
என்றாவது ஓர் ஆடவன்
பிறந்த மேனியில் ஒருமுறை வந்தால்..
இளக இடுப்பில் கட்டியிருந்த கற்புச் சேலையை
காற்றில் விட்டுவிடத் தயாராக இருந்தோம்..!
எங்கள் முனிசிரேட்டர்கள்
அப்படி ஏதும் நேர்ந்துவிட்டால்..
'இறைவனே வந்தான்' என்று புராணம் எழுத
ஏடும் எழுத்தாணியும் இடுப்பிலே வைத்திருந்தனர்..

அப்போதுதான்..

காட்டின் நடுவே ஊர்வலம் வந்தவன்
என் இதயத்தையும் தனக்கானது என்று கட்டிப்பிடித்தான்
தினவெடுத்த மேகத்தின் மீதேறி
மின்னல் கரத்தால் வெட்டி முழக்கி
ஆசைக்கடலைக் கொட்டும் சொர்க்கத்தின் தலைவன் அவன் —
பதுங்கி வந்தவன் இதமறிந்து வந்தான்
வானம் இருண்டது! வையக இயக்கம் நின்றது!
உலகம் என்னுள் உருளலாயிற்று.
இடியும் மின்னலும் என் மேனியைத் தாக்கின.
மின்னல் உருகியோடிற்று.. விண்டது நிலம்!
கொட்டியது மழை!
சொர்க்கமே எனக்குச் சொந்தமாயிற்று.

வந்தவன் பல இரவும் வந்தான்.

கமழும் கற்பூரத்தின் வாசனை ஆனேன்!
கற்பனைப் பெட்டியிலிருந்து வைர வைடூரியங்களை
நான் மூச்சுத் திணறும்வரை-என்மீது கொட்டினான்.
விந்தை மலர்க்கூட்டத்தில் என் மேனி மறைந்து
நான் பிணமாகும்வரை-என்மீது இறைத்தான்.
இலையாலும் மலர்களாலும் இணைத்த புத்தாடைகளை
என் எதிர்கால வாழ்வுக்குக் கட்டிப்பார்த்தான்.
பேரின்பத்தைப் பிழிந்தெடுத்த மூலிகைச் சாரத்தில்
என்னை ஊறவைத்துப் பாடகம் செய்தான்
எதிர்கால இன்பச் சொர்க்கத்தை என்முன் காட்டி மூடிக்கொண்டான்
என்னையே நான்
பார்த்துக்கொள்ளமுடியாத இருள் வெளியில்..
இன்ப அச்சுக்குள் இதமாக அடைபட்டுக்கிடந்தேன்

இந்திரன் என்னென்னவோ சொன்னான்
காட்டுச் சிந்தனைப் புதர்களை வெட்டி
வாழ்வின் நேர்பாதையை வகுப்பதற்கே
வச்சிரம் எடுத்ததாக வகைப்படுத்தினான்
முரட்டு வாழ்வில் திரியும் விலங்கை
வயல் வெளியிடையே மனிதராக்கவே
தாம்பு எடுத்ததாய்த் தனிமொழி கூறினான்.
இயற்கைச் செல்வத்தை எடுப்பதற்காகவே—
வறுமைக் காட்டில் சிதறிக்கிடந்து
துடிக்கும் மனிதரைத் திரட்டுவதாய்க் கட்டுரை கூறினான்.

இவ்வாறு இன்பத்தைக் களவாடி நான் தின்றபோது

வேள்வித்தீயின் ஆரவாரம்
வெற்றியைத் தந்ததாகக் கூறிக்கொண்டனர்.
உருவேற்றி..உருவேற்றி..
இறைவன் உருவைப் பெருக்கி
அண்டத்தை அவனுக்குள் அடைத்து அதற்கப்பாலும்—
இறைவன் ஆட்சியை எழுப்பினர் முனிவர்

இதயக்குடத்தில் வடித்தெடுத்த இறைவனை
இந்திரனுக்கெதிராக நிறுத்தி வெற்றிகண்டதாக விளம்பினர்
இவனது ஆட்சி எல்லைக்குள் எல்லாவற்றையும் திணித்தனர்
இந்திரன் உட்பட எவரும் அவனன்றி அசைவதற்குரிமையில்லை.

எங்கும்..எப்பொருளாகவும்—எவராகவும்..
எல்லா இயக்கமாயும் இருப்பவன் அவனே என்று
வேதம் வகுத்தனர்..விரிவுரை கூறினர்..
இந்திரனாட்சியும் இறைவனுக்கெதிராக
நிற்கத் திறனில்லை என்றே நிகழ்த்தினர்
ஆன்மச்சொத்தின் அருமை பெருமை
மேலுலகத்தின் மேன்மை உண்மை
நிர்வாணவெளியின் நீள அகலங்கள்
எல்லாவற்றையும் எம்மவர் கண்டனர்
வெற்றியின் விளைவுக்கு விழா எடுத்தனர்
காட்டில் சோமரசக் கடுநெடி கலந்தது.

குடலைப் புரட்டியெடுத்த வெறுப்பில் வாந்தி எடுத்தேன்
என்னைத் தின்று இதயத்தில் வளரும் கருவை எடுத்து
வெளியில் கொட்டிவிட வாந்தி எடுத்தேன்
வேள்விக்கரையில் தவளையாய் நிமிர்ந்திருந்த முனிவன்
மின்னல் கண்ணில் விழிக்க..
இடி இதயத்தை வெட்ட..
சிந்தனைப்புயல் மோத..
அகல்வானமாய் அசையாதிருந்தான்

இருள் நிறைந்த வைகறையில்
எனக்கு விடியல் பிறக்குமென்று காத்திருந்தேன்—
காலக்குளம் இருளாகக் குழம்பியது
மூச்சுத்திணறிய விண்மீன்கள் வெளிவந்து விழித்தன
தளையிடப்பட்ட கால்களை இழுத்துக்கொண்டு
எருமை இரவு மெல்ல நடந்தது.

எத்தனை தரந்தான் எறிமிதித்தும்
கொட்டமடங்காச் சேவல் உடல்நிமிர்த்தி ஓலமிட்டது.
இருளுக்குள் ஒளியைத்தேடி
கண்பஞ்சடைந்திருந்த என் கணவன்
உடலைச்சுருட்டி வெளியில் கொண்டுசென்றான்
பூனையாய்ப்புகுந்து
தசைப்பஞ்சுடலால் கட்டித்தழுவியவன் காதில்
முன்னிரவுச் செய்தியை ஊசியாய்ச் செருகினேன்
தீயின் சுவையுடலில் தோய்ந்திருந்தவன்
கம்பளிப்பூச்சியைக் கட்டிக்கொண்டவன்போல
வெருட்டென எழுந்தான்.

இன்பத்திருட்டுக்காக எத்தனையோ வடிவெடுத்தவன்
எங்கோ யாரோ ஒருவனின் மனைவிக்கு
அவளாகக் கெஞ்சிக்கேட்டுத்
தான் ஈந்த கருவிற்கு
எப்படி உரிமை கொண்டாடுவான்?
நள்ளிரவில் திருட்டுத்தனத்தில்
ஊரறியாமல் உறவறியாமல்
கேவலத்தில் கிளைத்துவிட்ட
கருவிற்கா தன் பட்டயம் கட்டுவான்?

வேண்டா வெறுப்பாய்
என்னுள் நானே திணித்துவைத்த உலகம்
என்னைவிட்டுத் தானே கழன்று எங்கோ மறைந்தது.
கண்திறந்து பார்த்தேன்.
கதவை அடைத்துக்கொண்டு
நின்றவன் வாயில் நெருப்புக் கனன்றது!

உடற்சருகைத் தன் மரவுரியால்
அள்ளிவந்த முனிவனைக் கண்டு
இடியைப் படைகொண்டவன் என்னமாய் ஓடினான்!
ஞானத்தாடியை அசிங்கமாய் வளர்த்தவனைக் கண்டு
கனத்த உடல் இரும்பைத் தூக்கிக்கொண்டு என்னமாய் ஓடினான்!
திருட்டுச்சொத்தான என்னை இன்பமாய் எடுத்துக்கொண்டு
''ஏய்! கிழட்டு முனிவா!
வேதத்தை ஓதி ஓதி விவேகம் கெட்டவனே!
உனக்கு மனைவி ஒரு கேடா?''
என்ற ஒரே கேள்வியில்
முனிவனைச் சாணியாய்த்தட்டிக்
கூரைமேல் எறிந்துவிட்டு
குதிரைபோல் பாய்வதைவிட்டு
தன் உடையில் படிந்த என் பார்வைத்தூசியை
உதறித் தள்ளிவிட்டு
வெள்ளத்திலிருந்து நீட்டிய என்கைகளை
வெட்டித் தள்ளிவிட்டு
என் இதயக்குடத்தில் எடுத்துச் சேர்த்திருந்த
இன்பக் கனவமுதத்தைக் கொட்டிக் கவிழ்த்து
நாய் நக்க விடுத்து
தான் விரித்த அகப்பொருள் உரைக்கு
ஆதாரமே இல்லை என்று
ஏட்டைக் கிழித்தெறிந்து..என்னமாய் ஓடினான்!

முனிவன் சபித்தானாம்..?

எங்கே சபித்தான்..!
பலமற்ற மனத்தரையிலிருந்து
ஆத்திரப்புயல் கிளப்பிய
சொற்புழுதியைக் கண்டே என்னமாய் ஓடினான் இந்திரன்
எதற்கெடுத்தாலும் சாபச் செருப்பைக்
கையில் எடுத்தாடும்
இந்தக் கள்ளிமர்த்தை நான் அறியேனா?

•

எத்தனை முறை இவன் எனக்கு
சாபம் கொடுத்திருக்கிறான்!
இவன் எடுத்தெறிந்த சாபக் கற்களைக்கொண்டே
என் மனக்கோட்டையை உறுதியாகக் கட்டிக்கொண்டேன்.
என்றாவது ஒருநாள்..
இக் கோட்டையை இடித்து
இவன் தலையில் கொட்டக்கிடந்தேன்.
தலைத்துவிட்டானே இந்தக் கோழை
எனது உடலின் மூலை முடுக்குகளில்
ஊறிய இன்பத்தை ஒரு துளி விடாது
உறிஞ்சிக் குடித்த சுரண்டல் மன்னனுக்கு
என்னை நானே இழந்துவிட்டது எப்படித் தெரியும்?
கொடுத்தேன் வாங்கினேன் என்ற
கொள்கைவாத வணிகப் பேய்க்கு
எனது நட்டம் எப்படித் தெரியும்?
அதிகார மாலையில் அழகு மங்கையரைக் கோத்து
மார்பிலிட்டுச் செருக்கித் திரியும் காமுகனுக்கு என்
இதயக் கருவின் ஏக்கம் எப்படித் தெரியும்?

ஓ..! இவன் என்னை என்னென்ன செய்தான்..!

இந்த உலக்கை ஆடவன் என்னைத் தனக்குப் பூனாக்கினான்.
இவன் உடல் அழுக்குக்கு என்னைச் சாக்கடையாக்கினான்
இந்த நாய் குளித்துக்கொள்ள என்னைக் குளமாக்கினான்
இவன் தன் செல்வத்தைப் பூட்டி வைக்க
என்னைப் பொக்கிசமாக்கினான்.
இவன் தன்னோடு படுத்தெழும் பாவையாக்கினான் என்னை —
இவன்
என் உடலைக்கொண்டே
என் ஆசைகளைக்கொண்டே
என்னை எவ்வளவு கேவலப்படுத்திவிட்டான்!

இவன் என்னை மட்டுமா கேவலப்படுத்தினான்?
இவன் ஒருவன் மட்டுமா எங்களைக் கேவலப்படுத்தினான்?
இவர்கள் எங்கும் இருந்தார்கள்!
எத்தனையோ பேர் இருந்தார்கள்!

இவர்கள்
உடற் பாத்திக்காகவே உயிர்ச்செடி வளர்ப்போர்!
உடற் புதையலை எடுக்கவே உலகைத் தோண்டுவோர்!
அதிகார மரத்திலேறி வித்தை பயில்பவர்!
கைக்கெட்டியவற்றைத் தம் வேலிக்குள் அடைப்போர்!
நீதிதேவதையின் கண்களைக் கட்டிவிட்டு
அவளது கையில் தம் தராசை நிறுத்துவோர்
இந்தப் பேய்களே எம்உடலையும் உள்ளத்தையும்
காலங்காலமாகக் காவு கொள்ளுகின்றன.

என்னை விட்டுப்பிரிந்து —
வடக்குநோக்கிச் சடைவிரித்துச் சென்றவன்
தன் மனத்தோடு பேசிக்கொண்டான்..
'அகலிகை ஓர் ஊதாரி
வேதியர் குலத்தின் சிந்தனைச் செல்வத்தை
விரைவில் செலவழித்துவிட்டு
எவர் கொடுக்கும் கடனுக்காகவும் இதயத்தைக்கூட
பணயும் வைக்கக் கிளம்பிவிட்டாளே!
எங்கோ பயணம்செய்யப் புறப்பட்டவள்
இடைவழியில் திசைமறந்து
மனவெளியின் பாழ்நிலத்தில் மயங்கிநின்றாள்.
இடைநிலத்தில் சந்தித்த எந்தப் பேயுடனும்
உடன்பாடு செய்ய உறுதிகொண்டாளே!

அகலிகை நீ ஒரு விந்தைப் பெண்..
ஆக்கமும் அழிவும் உனக்கு எளியவை!
இன்று நீ கல்லாகின்றாய்..
காலம் உன்னிடத்தில் கனிவைச் செய்யும்.'

முன்னம் ஒருநாள் முடிவிலா நள்ளிரவில்..
கண்டு விதிர்விதிர்த்த கனா
என் நெஞ்சில் குத்திட்டு மறைந்தது..
நெடுந் தொலைவில் ஓர் ஒளி வட்டத்தினுள்
இந்திரன் தெரிகிறான்.
அவன் நிழலில் இணைந்து நிற்கிறான் முனிவன்.
உலகம் எனதே என உரக்க முழங்குபவனை நோக்கி
நீயே இறைவன் என முனிவன் வேதம் விரிக்கிறான்.
இருவரின் காலடியில் ஓர் அனாதை மனிதன்!
காலச் சக்கரத்தில் கழுத்தைக் கொடுத்து
நெறிபடுகிறான்.
உற்றுப் பார்க்கும்போது
அவனது கண்களில் என்முகம் விழிக்கிறது.

ஆம் நான் கல்லாகிக்கொண்டிருக்கிறேன்..

கற்சிலையானால்கூட
நாய்கள் என்முன் எச்சில்கொட்டும் என்பதால்
கரடுமுரடான கல்லாகிக்கொண்டிருக்கிறேன்
மனிதப்பேய்கள் நடமாடாத.. காலம் மறந்த காட்டில்
கல்லாகிக்கொண்டிருக்கிறேன்
காலம் எனக்குமேல் காற்றாகக் கழிகிறது..
நஞ்சு கலந்த குழம்பிய மனக்குட்டையிலிருந்து
நினைவு மீன்கள் மேலே மிதந்து வருகின்றன.
அவற்றின் நறுமணத்தில்..நாற்றத்தில்..
எனக்கு நானே
பலமுறையும் பூசை போட்டுக்கொள்கிறேன்

இருவருக்குமிடையில் எனது வாழ்க்கை
எப்படித்தான் சுழன்றது.,?..!!
ஞானக் கோயிலில் வழிபடத் தகுதியில்லை என்று
ஒருவன் என்னை
உடற்பாதளத்தில் ஒதுக்கித் தள்ளினான்;
ஊனக் கோயிலில் வழிபாடே எனக்குச் சொர்க்கம் என்று
இன்னொருவன் உறுதிகூறி
என்னை உடற்சாக்கடையாக்கினான்.
இருவருக்குமிடையில்..!!

இதயக்குழிக்குள் புதைக்கப்பட்ட தனது ஆன்மாவை
வெளியிலெடுத்து உயிர்கொடுத்துக்
கொஞ்சிய ஒருவன்
எனது ஆன்மாவைத் தூக்கிலிட்டான்
தூக்கில் தொங்கிய எனதுடலை
இன்னொருவன் எடுத்துக்கிடத்தி
உயிர்கொடுக்க முனைந்து உயிர்வந்தபோது
மீண்டும் என்னைத் தீயிலிட்டுச் சாம்பலாக்கினான்
எனக்காக இன்னொருமுறை
குடம் உடைகிறது..கொள்ளிவைக்கப்படுகிறது..

மனிதக்கரு மறைந்து கிடக்கின்ற பெண்ணுருவை
இதயக் குருடர்கள் தடவிப்பார்த்தார்கள்.
எனக்கு
இதயமே இல்லைஎன்றும்
இதயமே தேவையில்லை என்றும்
கையடித்து என் கருவைக் கலைத்து
என் இதயத்தை வெளியேற்றப்பார்த்தார்கள்.

அடிமையாக இருப்பதே மோட்சத்திற்கு வழி
என்று ஒருவன் வேதம் ஓதினான்;
அடிமையாக இருப்பதே மோட்சம் என்று
மற்றவன் அகப்பொருள் அறைந்தான்.

ஒருவன் என்னை
காலுக்குச் செருப்பாக்கிக் கழற்றி எறிந்தான்.
மற்றவன்
தோலுக்குப் போர்வையாக்கித் தூர எறிந்தான்.
இருநாய்களும்
என்னிடத்தில் எலும்பையே தேடின..
இதயத்தைத் தேடவில்லை!
என் இதயமோ
தேடுவாரற்றுத் திகைத்துத் துணையின்றிச் சோர்ந்து
சுடுகாட்டுக்குப் பூப்பறிக்கப் போய்விட்டது..

இதயமிழந்து நான் பட்ட வேதனைகள்..

ஒருவன் ஞானவாள் கொண்டு என்
உளச்சிறகு அறுத்தான்.
மற்றவன் உடற்பாறை கொண்டு என்
உருவத்தைப் பொடியாக்கினான்
இருவருமே —
என்னை அறைத்துக் கூழாக்கி வெறுந்தரையில்
ஓடவிடப் பார்த்தார்கள்..
இருவருமே தமக்கென
உடலுழைப்புப் பொறியில் என்னை மாட்டிவிட்டு
ஊர்வலம் போனார்கள்
மனிதனாக விரும்பிய
என்னைப் பெண்ணாக்கி, அடிமையாக்கி

இவர் இழைத்த கொடுமைகள்..

மனிதனை இருவரும் வகிடெடுத்து வெட்டி
இடைவெளி இணையாத துருவத்தில் கிடத்தினர்.

ஆன்மக்கொடியை மண்ணில் வைத்து வளர்ப்பதைவிட்டு
மதியில் வைத்து வறுத்தான் ஒருவன்;
இன்ப மயிலுடலை வளர்ப்பதாக எண்ணி
முரட்டுக் கழுகை வளர்த்தான் மற்றவன்

ஒருவன் உள்ளத்தைப் பேயாக்கினான்;
மற்றவன் உடலைப் பிணமாக்கினான்.

இருவருக்குமிடையில்..

மனிதன் பாடு மயானப்பாடாகிவிட்டது!
பாடிக்கொண்டே பிணம் வேகிறது..
ஆரவாரித்துப் பேய் அதைத் தின்கிறது..
பிணத்தின் கண்ணில் பேய் தெரிகிறது..
பேயின் கண்ணில் பிணம் எரிகிறது..
எரியும் பிணத்தில் எண்ணெய் எடுக்க
நரி காத்திருக்கிறது.
எண்ணெய் வடித்து மேலும் எரிய
பிணம் காத்திருக்கிறது.

உடலும் உள்ளமும் ஒன்றா வேறா?
இன்பமும் ஞானமும் இரண்டா ஒன்றா?
ஆணும் பெண்ணும் ஒன்றா இரண்டா?
சொர்க்கமும் நரகமும் இரண்டா ஒன்றா?
அடிமையும் ஆண்டானும் ஒன்றா இரண்டா?
பேயும் தெய்வமும் இரண்டா ஒன்றா?
உண்மை என்ன..?

காலம் கழிகிறது..

காற்றுக்குள்.. வெளிக்குள்.. காலத்திற்குள்..
எனது கரு வளர்ந்துவருகிறது
கற்பாறைக்குள் எங்கோ உள்ள கனிவில்
வேர்பிடித்து முளைவிட்டு பாறையைப் பிளந்து
காலங்காலமாக வானை முட்ட வளர்ந்து நிற்கும்
தத்துவ மரத்தின் உச்சியிலிருந்து
உலகத்தைப் பார்க்கிறேன்.

மனிதன் இரண்டான அந்த முதற்காலத்திலேயே
எல்லாமும் இரண்டாகிவிட்டன.
ஆண்டான் தோன்றிய அதே காலத்தில்
அடிமையும் தோன்றிவிட்டான்.
தெய்வம் தோன்றிய காலத்திலேயே
பேய்களும் பிறப்பெடுத்தன.

நான் அடிமையாகவும் மறுத்தேன்!
ஆண்டானாகவும் மறுத்தேன்!
அதனால்
கல்லுக்குள் சிறைப்பட..தண்டிக்கப்பட்டேன்!

காலத்திரை விழுந்தெழும் மற்றொரு காலத்தில்..
ஆண்டான் அடிமையில்லாத அக்காலத்தில்..
சொர்க்கமும் நரகமும் தொலைந்த நாட்களில்..
இன்பமும் ஞானமும் இணைந்த பொழுதுகளில்..
உடலும் உள்ளமும் கூடும் கோலத்தில்
மனிதனாக நான் மறுபிறப்பெடுப்பேன்.

எனது பார்வை மேலும் கூர்மையாகிறது..
காலத்தின் விரிந்த எல்லை என்கண்ணுக்கு வசமாகிறது..

ஆற்றின் ஒரு கரையில் இந்திர மாளிகைகளையும்
மறுகரையில் ஆசிரமங்களையும் தோற்றுவித்த
வரலாற்று வெள்ளத்தின் வேகத்தில்
நான் கலந்து நிற்கிறேன்.
வைகறை என்னை நெருங்குகிறது..

காலத்தின் தலைவன் அதோ..
என்னை நோக்கி வருகிறான்.
கல்லறைக்குள் புல்லரிக்கத் துடிக்கிறேன்.

தேய்ந்து கிடந்த தெய்வீக வில்லை
ஒடித்த எடுப்பிலேயே இரண்டு துண்டாக்கி
வில்லைகளைத்தன் நெஞ்சோடு சேர்த்து—

நிலத்தின் சாரத்தைத் தின்று பெருத்த
அரச மரங்களை வேரோடு பறித்து
பாமரர்களின் பலத்தைத் தாங்கி—

காலம் இயங்காத காட்டுவெளியில்
பக்திப் பெருக்கிலே படகோட்டி வாழ்ந்த
வேடர் குலத்தைத் தோழமை கொண்டு—

உடலைப் போரால் உறவு குலைந்து
நாடு விட்டோடி நடைப்பிணமாகிய
பேதை மக்களுக்கு ஆற்றல்கூட்டி—

மலைகளைத் தகர்த்துக் கடல்களை நிரப்பி
உழைப்புக் காற்றிலே உயரப்பறக்கும்
வீரர் குலத்தைச் சோதரராக்கி—

கதிரவனுக்கும் எல்லை வகுத்து
உலகைச்சுருட்டி ஒரு குடைக்கீழ் திணித்து
சுரண்டல் சாம்ராஜ்யக் கொடிகளை உயர்த்தி
மக்களின் எலும்பை.. மாதர்கள் கற்பை..
இயற்கையின் பரப்பை.. இதயத்தின் சாரத்தை..
எல்லாவற்றையும் தன் எந்திரத்திலிட்டு
கதறக்கதற.. அரைத்துத் திரட்டித் தன்
ஆதிக்கக் கோட்டையை எடுப்பாகக் கட்டி
இறுமாந்திருந்த சுரண்டல் அரக்கனை,

காற்றாக வந்து..புயலாக வெடித்து..
நீராக வந்து..நெருப்பாகக் கொட்டி..
ஆதிக்கக்கோட்டையை அசைத்து நொறுக்கி
அதன் பாறைஇதயத்தைப் படீரெனப் பிளந்து
சுரண்டல் பிசாசின் தொல்லையிலிருந்து
உலகைக் காக்கும் உத்தமன்
அதோ..வருகிறான்

என்னைநோக்கி நெருங்கிவரும் அவனது
பாதமென்மலர் பட்ட கணத்தில்
என் ஆன்மா சிலிர்த்தெழுகிறது..
சிலிர்த்தெழுந்து..

விண்ணையும் மண்ணையும் தம்வசமாக்கி
வேதம் விரித்த முனிவனையும்
வீரம் பயின்ற இந்திரனையும்
தமக்குள் செரித்துக்கொண்டு
உலகம்பொது என உரக்க முழங்கி
உழைக்கும் கரங்களை உயர்த்திச் செல்லும்
அந்தக் கோடி மனிதர் கூட்டத்தில்
என் ஆன்மா
முக்திநோக்கி முன்னேறுகிறது,.

o

வாழ்க்கையின் முகத்தில்
காறித் துப்பி
உன்னோடு வாழமுடியுமா?
என்று கேட்டு
வாழ்க்கை விதித்த எல்லையை
விட்டுச் சென்ற
அருமைத் தோழன்
தேவராஜ் நினைவாக...

எனக்குள்

ஒரு வானம்...

1

இப்போதுதான்
உறங்குகிறார் தந்தை
ஊற்றிய கஞ்சியை
உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துவிட்டு

மான மரியாதை அவை ஓட ஓட
துரத்திப்பிடிக்க முயன்று இறுதியில்
நடைஒடிந்து
பச்சைவாதத்தின் விஷத்தீண்டலால்
படுக்கையில் கிடக்கிறார் தந்தை

கொசுக்கள் முற்றுகை
வாகனங்கள் இரைச்சல்
இடையிடையே மோதி
சிந்தனைக்குச் சற்றே ஓய்வுதர
அகல்விளக்கின் ஒளியில்
புத்தகத்தைப் படிக்க எடுத்து
முடியாமல் என் வாழ்க்கை ஏடுகளைப்
புரட்டிக்கொண்டிருக்கிறேன்

ஒரு பத்தாண்டுக்குள்—
எங்கள் வாழ்க்கை
வாழ்க்கையா அது?—
தட்டுத் தடுமாறித் தடம்புரண்டு
பள்ளத்தில் விழுந்து..
உடைந்த சில்லுகளை ஒட்டவைத்து
பழைய சாரமிழந்த கண்ணாடியில்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்

பச்சைமரங்கள் இடைவிடாமல் மொட்டையடிக்கப்படும்
மேற்கு மலையில் புறப்பட்டு
சாக்கடை நீரை நாளும் அதிகம் சேர்த்துக்கொண்டு
பன்றிகள் குழந்தைகள் வேற்றுமையில்லாமல்
விளையாட மடி கொடுக்கும்
பவானி ஆற்றங்கரையில்
முப்பாட்டன் கட்டி வைத்த
விழத் தெரியாத வீடுகளில்
இரவுபகல் எந்நேரமும் தறிக்குழியிலேயே
உடலை நட்டு வைத்து
கைகால்களை
காலந்தவறாத இயக்கத்தில் கட்டி வைத்து
வாழ்க்கைத் துணிகளை நெய்துகொண்டிருந்தோம்.

வாழ்க்கை ஆறு
வற்றியும் பெருகியும்
எங்கள் உடல் கட்டைகளை
இழுத்துச் சென்றது.
நாங்கள் பார்த்தறியாத நகரங்களில்
எங்கள் துணிகள்
எங்கள் உள்ளத்தோடு சேர்ந்து
சலசலக்கலாயின.
தொலைவில் எங்கள் துணிகள் செல்லச்செல்ல
வாழ்க்கை எங்கள் வசத்தில் இல்லை.
உறுத்தும் பெருத்தும் உறுமிவரும் இயந்திரங்கள்
எங்கள் வாழ்க்கை இயக்கத்தைக் குறுக்கின.
பழமைத் தறிகளில் பாசம் வைத்து
முன்பிலும் வேகமாக—
மிக வேகமாக
தாளம் தவறாமல் நெய்துகொண்டிருந்தோம்.

பவானியாற்றில் நாளும் மூழ்கி
பக்திப் பெருக்கில்..
பாகவதர் பாடல்களில்..
கிருத்திகை அமாவாசைக் கிழமைகளில்..
சீட்டாட்டம்..
சேவல்கட்டுகளில்..
சிந்தை இழந்திருந்தோம்.
இப்படியாக.. நடந்த வாழ்க்கை
தொய்ந்து விழுந்தது

பங்காளிகள் சதிக்குப் பலியாகி
பஞ்சாயத்து கோர்ட்டு என்று நடையாய் நடந்து
குடியிருந்த வீடு ஒன்றைத் தவிர
எல்லாவற்றையும் இறுதியில் இழந்து
'சம்பாதிக்கிறேனா இல்லையா பார்' என்று சவால் விட்டு
மான மரியாதைத் தீப்பந்தம் தூக்கி
என் தந்தை ஆடிய ஆட்டங்கள்..!
உள்ளத்தில் புகுந்து உருமிப் பொருமி
அவரைத் துரத்திய அந்தப் புலி..
என்னையும் என் தாயையும்
வீட்டுக்குள்ளும் வெளியிலும்
துரத்திக் கடித்துக் குதறிச் செய்த
ஆர்ப்பாட்டங்கள்.. அப்பப்பா!

அப்பா,
இரத்த வேட்கையில்
விடாது துரத்திய அந்தப் புலி இன்று
உங்களை அடித்துப் போட்டுவிட்டதே!
இரத்தம் முச்சூடும் உறிஞ்சிக் குடித்து
முடித்த நிலையில்
இனித் தீண்டாது உங்களை அந்தப் புலி
தொலை தூரத்தில் மட்டுமே கேட்கும் புலியின் உறுமலோடு
கனவுலகில் மட்டுமே நீங்கள் வாழ்கிறீர்கள்.

அப்பா இந்த உலகத்தை
நான் கதறக் கதற
என்மீது முத்திரை குத்தினீரே..
முடிவு என்ன பார்த்தீரா?

பள்ளிப் பையன்களோடு ஊர் சுற்றி வந்தபோது
குத்துச் சண்டையில் மூக்குடைந்து வந்தபோது
ஆற்றில் நீச்சல் பழக இறங்கி
மூச்சுத் திணற மூழ்கிய என்னை
மூன்றாவது வீட்டுப் பெருமாள் காப்பாற்றிக்
கரை சேர்த்தபோது
நீங்கள் தராத காசை நானாக எடுத்து
இட்டலி வாங்கித் தின்றபோது
சினிமா பார்த்து இரவு இரண்டு மணிக்கு வீடு வந்தபோது
'அடப்பாவி, உருப்படுவியா?
சட்டிதானடா உனக்கு மிஞ்சும்' என்று
கையால் காலால் அடித்து நொறுக்கினீர்களே
அந்த இளமைக் காலத்தை
இப்போது நினைத்தாலும் வலிக்கிறதே, அப்பா!

•

அப்பனுடன் சண்டைபோட்டு
ஊரைவிட்டு ஓடிவந்து
கூலியாளாகச் சேர்ந்த வேலப்பனை
அவன் சிவாஜி ரசிகன் —
சவுந்திரராஜனைப்போலவே பாடுகிறான்—
பாவம் அனாதை ஆகிவிட்டானே—
என்பதற்காக
காதலித்தாளே
கனகவல்லி அக்கா!
காதலை ஒரு நாள் கண்டபோது
கத்தியைத் தூக்கிக் கலாட்டா செய்து
வேலப்பனை ஊரைவிட்டுத் துரத்திய கையோடு
கனகவல்லிக்கு மாமன் மகனை
கடன்வாங்கிக் கட்டிவைத்தீரே!
மான மரியாதையைக் காத்துக்கொண்டதாக
பீத்திக்கொண்டதெல்லாம் என்னவாயிற்று?

முதலிரவிலேயே கனகவல்லி
தன் கற்புக்காக
மாமன் மகனை மருவ மறுத்ததும்,
பன்னிரண்டாம் நாள் மாமன்
ஊரைக்கூட்டி நியாயம் பேசியதும்,
நீங்கள்
தலைதூக்க முடியாமல் தன்மானம் தொங்க
தலைதலையாய் அடித்துக்கொண்டு கதறியதும்,
கனகவல்லி காணாமல் போனதும்,

கோவையில் வேலப்பனோடு அவள்
குடியிருப்பதாக ஊரில் பேச்சு
பாதையில் செல்லும்போது பங்காளிகள் உங்களை
'மானங்கெட்டவனே! நீ ஒரு மனிதனா?'
என்று காறித் துப்பினார்கள்
வீட்டுக்கு வந்தவுடன்
அம்மாவைத் தரையில்
உருட்டி உருட்டி உதைத்தீர்கள்
வாங்கின கடனை அடைக்க வழியில்லாமல்
வீட்டை விற்று வேற்றூர் வந்ததெல்லாம்

மறக்கக் கூடிய நினைவுகளா, அப்பா!

தீபாவளிக்குப் பட்டாசும் புதுத்துணியும்
வாங்கிவர பஸ் ஏறிச் சென்ற அம்மா
நகரத்தெருவில் நடுப்பகலில்
எமனாக வந்த லாரி ஏறி
மண்டை நொறுங்கி மடிந்தசெய்தி மாலையில்,
சாக்கில் மூட்டைச் சடலமாய் காலையில்
வந்து சேர்ந்தாள் அம்மா!
'அம்மா நீ இறந்ததற்கு ஏதாவது அர்த்தமுண்டா?
நீ வாழ்ந்ததன் அர்த்தமே கேள்வியாய்ப் போன பின்னால்..'

ஊரைவிட்டு
வந்த இடத்தில் வாடகை வீட்டில்
ஒட்டடையில் உருவான இருட்டறையில்
இரவுபகல் எந்த நேரமும் வெடிக்கும்
சண்டை சச்சரவு பத்துக்குடிகளுக்கிடையில்
வீட்டுக்கார அம்மாளின் வீம்புப் பேச்சுக்கள்
'இங்கே நிற்காதே' 'அங்கே கொட்டு'
'எட்டு மணிக்குள் வந்துவிடு'
'முதல் தேதிக்கே முப்பது ரூபாய் எண்ணி வைத்துவிடு'
வீட்டுக்கார மீசைக்காரன் குடிவெறியில் கும்மாளங்கள்
உலகமே வாடகை வீடாகி
யாரோ விதித்துவிட்ட வாழ்க்கையை
வாழ்ந்தே தீரவேண்டுமென்ற கட்டாயத்தில்
வாழ்ந்துகொண்டிருந்தோமே!
ஏதோ ஒருநாள் எதிர்த்துப் பேச
இருபத்துநான்கு மணி நேரத்தில்
வீட்டைக் காலிசெய்து
சட்டிபானைகளைத் தோளில் தாங்கி
முகப்பும் முகமும் மட்டுமே மாறிய வேறிடத்தில்
குடிபுகுந்தோமே! மானமரியாதைகள்— அவை
தந்த தண்டனை சொற்பமா அப்பா!

வயது இருபத்தைந்து
கல்யாணமான புதிதில் நீங்கள்
அனுபவித்த இன்பத்தை
மறக்க முடியாததனால்தான் என்னவோ
என்எதிர்ப்பை உதறித்தள்ளிக்
கல்யாணம் செய்துவைத்தீரே எனக்கு
கல்யாணமா அது?—
நாலு உறவினர்களை நாமாகக் கெஞ்சிக்கேட்டு
அழைத்துவந்து காலையில்

பேரூருக்கு பஸ்சில்போய்
கோயில் பிரகாரத்தில்
அலரி மாலை அலங்காரத்தில்
முப்பது ரூபாய்ப் புட்வையில் மோகனாவை
நாதஸ்வரம், நண்பர்கள், வாழ்த்துமடல், போட்டோ
பரிசளிப்பு விருந்து இல்லாமல்
கட்டிவைத்தீரே கல்யாணம் என்ற பேரில்!
வேலைக்கு ஒருவாரம் விடுப்பு
இரண்டு சினிமாக்கள்-இடையில் மருதமலைப் பயணம்
நிலவில்லா நாளில் ஒரு தேனிலவு
இரண்டே வருடத்தில்
இரு துருவமானோம்

o

இரத்தப்பசி கொண்ட அந்தப்புலி
மீண்டும் என்னைத் தாக்கியது
மோகனா மூலம்.
படுக்கையின்போது புகைந்து
பகல்நேரத்தில் வெடித்தாள்
கண்ணாடியைக் காதலித்த அளவுக்குக்
கணவன் என்னைக் காதலிக்கவில்லை
வாரம் ஒருமுறை சினிமாவுக்கு இழுத்துப்போய்
என்னைக் கதாநாயகனாக்கிவிடப் பார்த்தாள்
எதிர்வீட்டுக்காரியின் துணிமணிகளைப் பற்றியே
எந்தநேரமும் பேசினாள்
இரவில் பகலில் எந்தநேரமும்
கனவுலகில் கதாநாயகியாய் இருந்தாள்
நனவுலகில் பார்வைபட்ட இடத்தை எரித்தாள்
தனக்குள் உருவாக்கிக்கொண்ட குட்டை உலகுக்குள்
யாரையும் உள்ளே விட மறுத்தாள்
பாட்டி கற்றுக்கொடுத்த பாடத்தை உருப்போட்டாள்
கணவனைக் கல்லாக்கி வழிபட்டாள்
முருகன் படத்துக்கு மும்முறை தூபதீபம்
வாரத்தில் இரண்டுநாள் உபவாசம்
தவறாமல் கிருத்திகைக்கு மருதமலைவாசம்
ஐந்து பைசாவுக்கும் பத்துப்பைசாவுக்கும் கிளி ஜோஸ்யம்

பொங்கலுக்கு முந்தியநாள் மாலை,
மூன்று மாத வாடகை பாக்கி, வாசலில்
வீட்டுக்காரனின் உரிமை வசவுகள்,
பொறுக்கமுடியாமல்-
பத்துக்கு வாரம் இரண்டு ரூபாய் என்றமுறையில்
ஈட்டிக்காரனிடம் ஐம்பது ரூபாய் கடன் வாங்கி,
'மாலையில் வருவான் வீட்டுக்காரன், கொடுத்துவிடு'
என்றுவிட்டு வேலைக்குப் போனேன்.
நைலக்ஸ் புடவை நாற்பது ரூபாய்க்கு
வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள் மனைவி
மாலையில் வீட்டுக்காரன், அப்பா, இருவரும் கத்த
எதிர்வீடு அண்டைவீடு எல்லாம் எதிரேவாம்.
இரவில் வந்தேன் வீட்டில் விளக்கெரியவில்லை
தாய்வீட்டுக்கு மனைவி போனாளாம். தலையில் இடி!

காலையில், பண்டங்கள் பாத்திரங்கள் எல்லாம்
பழைய மார்க்கெட்டுக்குச் சுமந்து
இரண்டுமணிநேரம் பேரம் பேசி
இருநூறு ரூபாய்க்கு விற்று
வழியிலேயே ஈட்டிக்காரன் வீட்டுக்காரன்
இருவருக்கும் தீர்த்துவிட்டுக் கிளம்பி
மாமியார் வீட்டில் மனைவியைப் பார்த்தேன்

'பத்துப்பேர் முன்னிலையில் செருப்பால் அடிப்பேன் என்று
எப்படிச் சொல்லலாம் உங்கள் அப்பா' என்பதையே
நூறாவது முறையாகக் கூறி
'கிழவனா? நானா?'
முடிவுசெய்யுங்கள் என்று கதவை
முகத்தில் அடித்துவிட்டு உள்ளே போய்விட்டாள்.

வீடு வந்தால்
அறிவு பேதலித்து அப்பா அலறுகிறார் :
"கேட்டாளே ஒரு கேள்வி
கிழட்டுப் பிணத்துக்கென்ன
மானமரியாதை வேண்டிக்கிடக்கு
மானங்கெட்ட உன் மகனென்றா
என்னை நினைத்தாய்?
மண்டை வெடித்தா செத்தாள் உன் பொண்டாட்டி?
மண்டையில் அடித்துக் கொன்றிருப்பாய்.
உன் மகனொரு ஆம்பளையா?
எந்நேரமும் இந்தக் கிழவன்
என்ன சொல்லிவிடுவானோ என்று தொடைநடுங்கி.. சீ!
கிழவா, நீ செத்தால்தான் நாங்கள் சேர்ந்திருக்க முடியும்.
எந்நேரமும் என்னைக் குறைபேச
உனக்கா நான் கழுத்தை நீட்டினேன்?
பிச்சைக்காரனுக்குப் பெருமை ஒரு கேடா?
உன் மகனே உனக்குப் பொங்கிப் போடட்டும்
நான் தொலைகிறேன்"

o

அப்பா! வாழ்க்கை ஏன்
இப்படி நம்மை வாட்டுகிறது?
நம் உடலுக்கு அழகாக அணிந்து
அடிக்கடி துவைத்து அணிந்தணிந்து
கழித்துப் போட்ட கந்தல் வாழ்வை
எத்தனை நாளைக்கு நாம் வைத்திருப்பது?

நான் எவ்வளவுதான் எதிர்த்தபோதும்
நீங்கள் ஆழமாக ஆணியடித்துப் பொருத்தின
மான மரியாதைகள் என்னிடத்தில் ஆழத்தில்.

உங்களை ஒரு காலத்தில் வெறுத்தேன்
வெறுப்புக்கிடையிலும் உங்களை
விரும்பியிருக்கிறேனே!
அம்மா செத்ததும் 'இனி யாருடா என்னைக் காப்பாற்றுவார்கள்'
என்று நீங்கள் நிலை குலைந்தபோது
உங்களைத் தாங்கிக்கொண்டே
'நான் இருக்கிறேன்' என்று கூறினேனே அப்போதே
நீங்கள் எனக்கொரு குழந்தையாகிவிட்டீர்களே..

o

வாழ்க்கை எனக்குத் தந்த தண்டனையை
ஏன் நான் வாழ்க்கைக்குத் தரக்கூடாது?
என்று இடையிடையே என்னவோ எண்ணினேன் :
எத்தனை முறை எட்டி மிதித்தாலும்
விலகமாட்டேன் என்ற திமிரினால்தானே
இந்த வாழ்க்கை என்னை இப்படி வதைக்கிறது!
இந்த வாழ்க்கையின் முகத்தில் காறித்துப்பிவிட்டு
உன்னோடு மனிதன் வாழமுடியுமா என்று கேட்டு
வாழ்க்கையின் எல்லையைவிட்டே ஏன்
போய் விடக்கூடாது? வாழ்க்கை எனக்குத்
தராத சுதந்திரத்தை ஏன் நானே
எடுத்துக்கொள்ளக்கூடாது?

o

2

வாழ்க்கைத் துணியிலிருந்து
நான் கிழித்தெறியப்பட்டேன்
இளமையிலிருந்து நான் வெளியேற்றப்பட்டேன்
முதுமைகூட எனக்கு அங்கீகரிக்கப்படவில்லை
உறவின் இரத்தம் என் உயிரிலிருந்து பிழியப்பட்டுவிட்டது
மண்ணோடு எனக்குள்ள வேர் துண்டிக்கப்பட்டது
இலக்கியம் என்வாழ்வில் எரிந்து சாம்பலானது
பண்பாடு எனக்கு எட்டாத உயரத்தில் பறக்கிறது
வாழ்க்கையிலிருந்து நான்
அந்நியமாகிவிட்டேன்.

யாருக்காகவோ
என்னோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கைகளை
அசைத்தசைத்துச் சலித்துவிட்டேன்.
கைகால்கள் எனக்குச் சொந்தமில்லை
யாருடைய கால்களிலோ நான்
நடந்து நடந்து சலித்துவிட்டேன்.
யாரோ வயிற்றுக்கிடும் பிச்சைக்கு
இரந்து இரந்து தளர்ந்து போனேன்
வயிறுமட்டுமே எனக்கு வாரிசு உரிமை
மானமரியாதைகள் எனக்கு அலங்காரங்கள்
சுகம் எனக்கு ஒரு திருட்டுப்பொருள்
ஜனன மரணப் பதிவு தவிர
உலகில்எனக்குப்பதிவு இல்லை.
எனக்கே நான் சொந்தமில்லை.

யாருக்காகவோ நான் உற்பத்தி செய்த பொருளுக்கு
என்னை நானே விலையாகத் தருகிறேன்.
உலகச் சந்தையில் ஒவ்வோரிடமாக
மாற்றி மாற்றி விற்கப்படுகிறேன்.
கடவுள் என்னைக் கைவிட்டுக் காலங்கள் பல கழிந்தன.
வாழ்க்கையில் விரிந்துவரும் வெறுமையை அடைக்க
அவரை விசுவரூபமாக்கினேன்.
கனத்து வளரும் விசுவரூபத்தின் அடியில்
என்னை நானே கிடத்திக்கொண்டேன்.
தெய்வங்களைப் பெருக்கியபோது
எனக்குள் நான் சிறுத்துப்போனேன்.
அண்டத்தை இறைவனுக்குள் அடக்கியபோது
எனக்கே இடமில்லாமல் வெளியேற்றப்பட்டேன்.
தெய்வங்கள் கைவிட்ட உலகைப்
பிசாசுகள் எப்போது ஆக்கிரமித்தன?
நானும் ஒரு பிசாசானது எப்போது?
எனக்குள் என்னையே
எனக்குமுன் நானே
ஒரு பிசாசாகக் கிழித்துக்கொண்டிருக்கிறேனே!
இது எப்படி ஏற்பட்டது?

o

என்னைப் பிசாசாக மாற்றியவன் எப்படித்
தான் தெய்வமாகமுடியும்?
வயிற்றைக் கழுவக் கெஞ்சிக் கூத்தாடி
வேலைக்காக என்னை நான் விற்ற இடத்தில்
என்னையே மூலப்பொருளாக்கி
என்னை அவன் நெய்தான்.
என்னையே அவனுக்காக நான்
நெய்துகொண்டிருந்தேன்.
ஆடையின் அழகெல்லாம் எனக்குள்ளிருந்தே ஏறின.
ஆடையின் ஊடும் பாவுமாக
என்னை நானே நெய்துமுடித்தபின்
மரச் சட்டங்களாக மட்டுமே அழகற்றுப்போனேன்
உறக்கத்தின்போது நான்
சுவர்க்கத்தில் நுழைகிறேன்.
மதுவெறியில் சில நேரம்.
ஞாயிற்றுக் கிழமையின் வரவுக்காகவே
திங்கள்முதல் வேலை செய்கிறேன்.

இரவின் இன்பத்திற்காகவே
பகலின் வேதனையை ஏற்கிறேன்.
வேலையிலிருந்து விடுதலை பெறவே
வேலைச் சிறையில் பூட்டிக்கொள்கிறேன்.

o

என்னை விதிக்கயிற்றில் வைத்துச் சுழற்றுபவன்
தானாவது சுதந்திரவானாக இருக்கிறானா?
விதிக்கயிற்றைச் சுழற்றுவதையே வேலையாக்கி
அதற்குள்ளேயே சுழன்றுகொண்டிருக்கிறான்.
எனக்குச் சிறையை ஏற்படுத்தியவன்
சிறையதிகாரத்திலேயே சிறைப்பட்டுவிட்டானே!
எங்களுக்காக இரும்புவிலங்கைத் தயாரித்தவன்
பொன் விலங்கைப் பூண்டு மகிழ்கிறானே!
உடலுக்குள்ளே என்னைக் கட்டிவைத்தவன்
உள்ளத்தினுள்ளே சிறைப்பட்டுவிட்டானே!
என்னைப் பிசாசாக மாற்றியவன்
எப்படித் தான் தெய்வமாக முடியும்?

o

என்னிடமிருந்து எல்லா அதிகாரங்களையும்
பறித்துக்கொண்டு
எனக்கே எல்லா உரிமைகளும் இருப்பதாக
உரிமைச் சாசனம் வெளியிடுகின்றனர்.
கையெழுத்திட
கையில் ஆயுதமேந்திக் கட்டாயப்படுத்துகின்றனர்.
மறுக்கும்போது
என் கையெழுத்தை அவர்களே இட்டுக்கொள்கிறார்கள்.
இந்தச் சடங்குகளுக்குப் பின்னர்
இந்த நாட்டின் மதிப்புக்குரிய பிரஜை நான்.
இனி என்னிடமிருந்து வரி வட்டி குத்தகை
வாடகை லாபம் எல்லாமே வசூலிக்கப்படலாம்
இவற்றைச் செலுத்த முடியாதபோது நான்
விளைநிலங்களிலிருந்து வீடுகளிலிருந்து
வெளியேற்றப்படுகிறேன்.
வாழ்க்கைமாளிகை தன் நுழைவாயிலில்
'அந்நியர் பிரவேசிக்கக்கூடாது' என்ற
அட்டையைத் தொங்கவிடுகிறது.

o

இடையிடையே
என்னைக் காப்பாற்றுவதற்காக
எத்தனையோ பேர்
முத்திரையிடச் சொன்னார்கள்.
முத்திரையிட்ட நாளிலிருந்து அவர்கள்
முகத்தைக்கூடப் பார்க்கவில்லை.
அதிகாரக் கூட்டத்தில் ஐக்கியமானவர்கள்
எங்களை மேலும் அதிகாரமற்றவராக்கினார்கள்.
எங்கள் உரிமைகளை மீட்டுத் தருவதாகச்
சத்தியம் செய்தவர்கள் சகல உரிமைகளையும்
தமக்கே செய்துகொண்டார்கள்.
அனாதைகளாக முகவரியற்றவர்களாக
தெருவில் திரிவதைக்கூடக் குற்றமாக்கினார்கள்
நாங்கள் கொடுத்ததாகக் கூறப்படும் ஆயுதங்கள்
எங்களை நோக்கியே நீட்டப்படும்போது
எங்கள் ஏமாற்றத்தை எப்படி மறைக்க

o

இளம் வயதில் எனக்கு
அழகாகத் தெரிந்த வானம் வைகறை மலர்கள் மதியம்
இப்பொழுது ஏன் என் வாழ்க்கையில் வருவதில்லை அப்பா?
மழையும் காற்றும் சொல்லும் கதைகளையெல்லாம்
கற்பனையில் திரித்துப் பட்டமாக விடுவேனே!
இப்போது அவை ஏன் பறப்பதில்லை?
அப்பா!
ஒருநாள் நான் நரிக்குறவர்களோடு
நாள் முழுதும் சுற்றித் திரிந்து
இரவிலும் அவர்களோடு இருந்து
உறங்கிவிட்ட என்னை
புளியவிளாறினால் உரித்து இழுத்துவந்தீர்களே
என்னை அவர்களோடு விட்டிருக்கக்கூடாதா?
என்னிடமிருந்து இளமையையும் அழகிய உலகையும்
பறித்துவிட்ட பாவிகள் யாரப்பா?
பிச்சை வாழ்வை நக்கி நக்கி
நாக்கு மரத்துப் போய்விட்டதே!

இவர்களுக்கு என் உயிரையும் உடலையும் வழங்கி
இவர்கள் தம் பலிபீடங்களில் என்னை வைத்து வெட்டும்போது
துள்ளினால் துடித்தால்கூட அதையும்
குற்றத்தில் ஒரு பிரிவாக்கி
அரக்க சாம்ராஜ்யத்தை அற்புதமாகக் கட்டியிருக்கிறார்கள்.
இவர்கள்தான்
வாலிவதையை நியாயப்படுத்துகிறார்கள்.
கண்ணகியை எத்தனாவது குற்றப்பிரிவில் கைதுசெய்யலாம்
என்று காத்திருக்கிறார்கள்.
துச்சாதனனுக்கு மந்திரிப் பதவி.
துரியோதனனுக்கு சிலை.
சீதையின் சிறைப்படலம் பக்திப் பரவசம்
எல்லாமே இவர்கள் ஆளுகையில்.
அண்டத்தின் இயக்கத்தை
அரைநிமிடம் நிறுத்தியதற்காகச்
சிவபெருமானைச் சிறையிடப் பார்க்கிறார்கள்.
இவர்களின் எண்ணிக்கைக்கு மேல்
உயிர்களைப் படைத்த பிரம்மாக்களை
கருவறையிலிருந்தே வெளியேற்றிவிட்டார்கள்!

o

வாழ்க்கைத் துடைப்பத்தால்
முழுமையாகப் பெருக்கப்பட்டு
குப்பைத் தொட்டியில் கொட்டப்பட்டு நாம்
வண்டியேறிப் போய்க்கொண்டிருக்கிறோம்.
வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து
நாம் நன்றாக அழுகிவிட்டால்
நமக்கும் ஓர் விற்பனை மதிப்பு!
விற்கப்படும் ஒவ்வொரு முறையும்
நம் மதிப்புக் குறைய
விற்பவர் மதிப்பு வானைத் தொடுகிறது.
விற்கப்படுவதற்கே பிறந்த நாம்
பட்டாகப் பிறந்தாலென்ன!
பஞ்சாகப் பிறந்தாலென்ன!
அப்பா!
நான் பட்டாகப் பிறந்தேனில்லையா?
இப்போது பஞ்சாகிவிட்டேனே!

o

தாமே சட்டம் செய்துகொண்டு,
சட்டத்திற்குட்பட்டு
கொலை, கொள்ளை, கற்பழிப்பை
நாகரிகமாகச் செய்பவர்கள்,
தமது இயந்திரப் பொறியில் நம்மை
நயமாக மாட்டிவைத்துக் கசக்கிப் பிழிந்து
வெளியே தள்ளும்போது,
இவர்களைப் போலவே —ஆனால்
இவர்களின் சட்டத்துக்குப் புறம்பாக—
நாங்களும் செய்யும்போது
இவர்களின் வக்கிரமான பதிப்பாகி
இவர்களை எதிர்த்து நிற்கும்போது
இவர்களின் இயந்திரச் சிறைகளில்
கைகால்கள் முறிக்கப்படுகிறோம்!

இவர்கள் அமைத்துள்ள கல்வித் தொழிற்சாலைகளில்..
இவர்கள் அறம் வளர்க்கும் கோவில்களில்..
இவர்களது வானொலி வித்தகத்தில்..
இவர்களால் அன்போடு - அதிகாரத்தோடு
குத்தப்படும் முத்திரைகளால்
இவர்களால் அலங்கரிக்கப்பட்டு
இவர்களுக்கு சேவகனாய்,
இவர்கள் வீட்டு நாயாய், வேசியாய்,
வாழ்க்கையின் அவலம்
நம்மைப் படுத்திய பாடுகள் கொஞ்சமா?

o

யாருடைய கையிலிருந்தோ இயக்கப்படும்
விதிக்கயிற்றில நாம் ஊசலாடுகிறோம்.
விதிக்கயிற்றின் வேகம் தாங்கமுடியாமல்
என்தாய் மண்டை நொறுங்கிச் செத்தாள்
அவசரத்தோடு-ஆத்திரத்தோடு வந்த லாரி மோத.
விதிக்கயிற்றின் வேகத்தை வெல்ல
வேகத்தோடு என்மனைவி விளையாடி வெடித்தாள்.
விதிக்கயிற்றின் வேகத்தை எதிர்த்து
நிலைகுலைந்தார் என் தந்தை.
நானோ, விதிக்கயிற்றின் சுருக்கிலிருந்து
என்னை நானே கழற்றிக்கொள்ளத் துடிக்கிறேன்.
விதிக்கயிற்றின் வேகம் அதிகரிக்கிறது,
நாம் பயங்கரமான சூதாட்டத்தில் சிக்கிவிட்டோம்
எதிரிகளின் கைகளில் சனி புகுந்து விளையாடுகிறான்.
சட்டிசுரண்டும் சமையல் வேலைக்கும்
வண்டியோட்டும் வேலைக்கும்
நம்மை இவர்கள் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்
நமது குழந்தைகளே நாளை
நடுத்தெருவில் நிறுத்திவைத்து நறுக்கென்று
நியாயம் கேட்கப்போகிறார்கள்.
அப்போதாவது நமக்கு உறைக்குமா?
பதிலுக்கு ஒரு சாத்திரம் மேற்கோள் காட்டுவோம்.
நம்மை நாமே விற்றுக்கொண்டு
கிடைத்த காசை எண்ணிக்கொண்டு
சுடலை காக்கப்போகிறோம்.
இறுதியில்
நம்மைநாமே வெட்டிக்கொண்டு
நம்மைநாமே எரித்துக் கொள்ளும்முன்
ஒருமுழத்துண்டு, கால்ரூபாய் வசூலுக்கு
இவர்கள் வந்துசேர்வார்கள்.

o

3

வெறுமை வெளியில்
காலையில்
கனத்த தலைவலி
உடலும் உள்ளமும் இருவேறு திசையில் இயங்க
தந்தைக்குச் செய்யும் தனயனின் கடன்களை முடித்தேன்.

o

இன்று ஊர்வலம்
மும்மூர்த்திகளிலும் முதல் மூர்த்தியாகிவிட்ட
நவீனகால மார்க்கெட் எமன்கள்
வைத்துச் சுழற்றும் இயந்திரக் கயிறுகளின்
இயக்கத்திலிருந்து
கைத்தறிச் சத்தியவான்களைக் காப்பாற்ற
அபலைச் சாவித்திரிகளின் அடுத்த கட்டப் போராட்டம்

o

இவற்றுக்கிடையில்
நம்பிக்கைப் பாத்திரங்களோடு
நாலாயிரம் பேர்
வறண்ட வானத்தின் கீழ்
கானல்நீர்களைத் தேடிச்செல்லும்
நீண்ட— மிகநீண்ட ஊர்வலங்கள்—
மாநாடுகள்.

எதிரொலி இல்லாத பாழ்வெளியில்
உரக்க எழுப்பிய கோஷங்களில்
நம்பிக்கை மழைநீர் நாளையே கொட்டப்போவதாக
கூறிக்கொண்ட கூட்டத்தின் இறுதியில்-
அடுத்த மாதம் முதல்தேதி
மாவட்ட ஆட்சித் தலைவரின்
ஆட்சி அலுவலகத்தை
பெண்கள் குழந்தைகள் உட்பட
ஆயிரம்பேர் கூடி முற்றுகையிட்டுக்
கைப்பற்றுவதாகப் பிரகடனம்!
—கைப்பற்றி ஆட்சி அதிகாரம் நிறுவி
இயந்திரங்கள் நொறுங்கி - இப்படி ஏதாவது
எண்ணமா? அப்படியுமில்லை.
'வேலை கொடு-இல்லாவிட்டால்
வெஞ்சிறையில் சோறு கொடு' என்ற
புனிதத் திட்டத்துடன் ஊர்களுக்குப்
புறப்பட்டுச் சென்றனர்.

o

இன்னோர் இரவை எப்படிக் கழிப்பேனென்று
வேதனையோடு வீட்டு வாயிலை மிதித்தபோது—

காண்பதென்ன கனவா!
என் வாழ்க்கையில் ஒரு பகலா!
இளமைக் காலத்தின் பிரதிபலிப்பா!
இதயத்தில் வைத்து மறந்துபோய்விட்ட
அன்பின் ஊற்றா! -என்ன இது?
வலையில் பிடிக்க வாழ்க்கை வீசும்
இறுதிக் கயிறா?

காண்கிறேன் என் அன்பு அக்காவை
அவள் கணவனோடு குழந்தையோடு.

பாசப் பாய்ச்சலில் என்னைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.
மேகத்தையே மறந்துவிட்ட - வறண்ட
என் வானத்திலும் இப்படியொரு
இடி, மின்னல், கண்ணீர் மழை.
வித்தற்றுக் கிடந்த நிலத்தில் ஒரு விளைச்சல்.

இந்த இடி எங்கிருந்து இடிக்கிறது?
இந்த மின்னல் எங்கிருந்து பாய்கிறது?
இந்த மழை எப்படிக் கொட்டுகிறது?
இந்த விளைச்சல் எப்படி விளைகிறது?

அரை மணி நேரம் அன்பில் நனைந்து
நனவுலகத்திற்கு நாங்கள் வந்தோம்.
நீலவானம் குளிர்ந்து நிம்மதியாய்க் கிடந்தது.
வாய்பேசாத நிலையில் பார்வை மலர்களை
எங்கள்மீது தூவிக்கொண்டிருந்தார் அப்பா!

o

இடையிடையே எத்தனையோ
நிகழ்ச்சிகள் பற்றி—
வேதனை குமிழியிட ஆத்திரங்கள் வெடிக்க
இதயம் உருகப் பேசிக்கொண்டே
எங்கள் வீட்டில் மணக்காத சமையலை
என் தமக்கை தான்கொண்டுவந்த
காய்கறிகள் அரிசி பருப்பு ஆகியவற்றுடன்
செய்து முடித்தாள்.

வேலப்பனின் வித்தகப் பேச்சுக்கள்
சந்திரனின் கேள்விகள், கதைகள்
வேதனையைச் சற்றே மறக்கவைத்தன.
சமையல் ஒருகலை, உண்பதிலோர் இன்பம்,
பேச்சில் ஒரு கலைத்திறன், பேதமையும் ஓர் அழகு,
என்பதையே மறந்திருந்த நான்
ஒரு புத்துலகில் நுழைந்தேன்

(மூன்றே முக்கால் நாழிகை மட்டுமே
நிலவுவதாக இருந்தாலும்
இந்த மாய உலகம் எனக்குத் தேவையான உலகம்)

கனகம் பேசுகிறாள்:
''கிருத்திகைக்காக நேற்று--
இப்படிச் செல்வது எங்களுக்குப் பழக்கம் இல்லை—
பொழுதுபோக்காக
மருதமலை சென்றபோது
பார்த்தோம்
மோகனா தாயோடு வந்திருந்தாள்

(இடையில் என் மனக்குரல்:
இன்னும் அவள் மருதமலைக்கு
ஏன் செல்லுகிறாள்?)

மோகனாவின் தாய்
இவர் சித்திக்கு உறவு!
அந்தச் சித்தியின் சீண்டலால்
தந்தை விரட்டத் தான்
இவர் நம்மூர்க்கு வந்தார்.

(வழக்கமான சித்தியின் கொடுமைதானா?
சித்திகள் ஏன் இப்படி
கைகேயிகளாகவே பிறக்கிறார்கள்!)

மோகனா உன்னோடு வாழவில்லை
அப்பாவையும் தின்னுகிறது நோய்
இனியும் விரோதங்கள் வேற்றுமைகள்
வேண்டாமென்று வந்தோம்
அன்பைத்தவிர உலகில் வேறு
என்ன இருக்கிறது?

(உண்மைதான்.
பவானி வெள்ளத்தில்
துணி துவைத்த தோழி விழுந்துவிட,
காப்பாற்றத் தாவி அவளைக் கரைக்கிழுத்துவிட்டு
நீ சறுக்கி வெள்ளத்தில் சரிந்தாய்.
கரையில் நின்ற குறவன் குதித்துக் காப்பாற்றினான்
கலவரமின்றி வீட்டில் சொன்னாய் :
'அவள் அப்பாவுக்கு ஒரே ஒரு மகள்'
'அதனாலென்ன?'
'இறப்பது அவளானால் என்ன?
நானானால் என்ன?'
வேலப்பன் பாக்கியசாலி
அன்புப்போரில் கனகத்தை
யார் வெல்ல முடியும்?)

மோகனாமேல் தப்பில்லை, முத்து!
நகைகளுக்கும் அலங்காரங்களுக்கும்
மதிப்பளிக்கும் மனிதர்க்கிடையில்
பாவம், அவள் என்ன செய்வாள்!
எத்தனையோ ஆசைகள் இளமை முதல் அவளுக்கு
எல்லாவற்றையும் உன்மூலம்
நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்
என்ற வேகம் அவளுக்கு

(இவள் ஏற்றிவைக்கும்
பொதிகளைச் சுமக்க
நானா கிடைத்தேன்)

இடையில், வேலப்பன் :
''மோகனாவின் தாயை
கல்யாணத்திற்கு முப்பது பவுன் போட்டால்தான்
கட்டிக்கொள்வோம் என்று
மாப்பிள்ளை வீட்டார் குரங்குப் பிடியாய் நிற்க
இருபது பவுன்களைத் தங்கப் பூச்சாக இட்டு
மணம் முடிக்க,
இரண்டாவது மாதம் இந்தக்
குட்டு வெளிப்பட்டு
வட்டிக்காரனுக்கு மகனாகப் பிறந்த
கணவன் கையில் பட்ட அடிகள்!
வீட்டார் செய்த வேதனைகள்!''

(ஒருசமயம் நானும்
மோகனாவைக் கொடுமை செய்திருந்தால்
அடங்கியிருப்பாளோ என்னமோ)

பத்தாண்டுக்காலக் கொடுமைக்குப்பின்
மலையாளப் பெண்ணைக் கூட்டிவைத்து
அவன் செய்த கூத்துகள்! இவற்றுக்கு
இடையில்தான் மோகனா, பிறப்பு, வளர்ப்பு.
வாழாவெட்டியாகி இட்டலி சுட்டு இவர்கள்
வயிறு வளர்த்தார்கள்''

மீண்டும், கனகம் :
''இந்தச் சூழலில் போலி மனிதர்கள்
தரும் மரியாதையைக் கடந்து
தன்னைத்தானே மதித்துக்கொள்ளும்
தைரியம் எப்படி அவளுக்கு வரும்?''

(தன்னைத்தானே மதித்துக்கொள்ளும்
தைரியமா? —
நானாக விரும்பிக் கட்டும்
தாலிக்குத்தான் நான் கட்டுப்படுவேனே தவிர
ஊருக்காக - என் தந்தைக்காக
யாரோ கட்டும் தாலிக்கு நான்
மனைவியாகமாட்டேன்.
கயிற்றைக் கட்டி மனைவியாக்கிக்கொள்ள
மாடுகள் ஒப்புக்கொள்ளலாம்;
நான் மாட்டேன் என்று
ஊரார் முன்னிலையில்
தாலியை அவிழ்த்துவைத்த
தன்மானம்! தைரியம்!
கனகம் உனக்கே சொந்தமல்லவா!)

''போலித்தனமாக மினுக்கும்
வாழ்க்கைக் கடைத் தெருவில்
ஏழைகள் எப்படி உலவமுடியும்?''

வேலப்பன் :

எல்லாமே வாலறுந்த நரிக்கதைதான்
முதல் நரி வாலறுந்தது தெரியாமல்
இடையில் வந்த நரியை
எப்படிக் குறை சொல்வது?
சூர்ப்பனகைகள் சீதைகளாக வேடம்போட்டு
மூக்கறுபடுவது போதாதென்று
இராவணர்களை உற்பத்தி செய்கிறார்கள்!

நான் :

வீட்டில் செய்யும் சாத்திரங்கள்
சடங்குகள் போதாதா?
மருதமலைப் பயணம் கிருத்திகை தவறாமல்
என்ன வேண்டிக்கிடக்கிறது இவர்களுக்கு?

கனகம் :

திக்கற்றவர்களுக்குத்
தெய்வங்களே துணையில்லையா!

வேலப்பன் :

ஆமாம்!
வாழ்க்கைத் திசையை
வகுத்துக்கொள்ளாதவர்களை—
மாணிக்கவாசகர்களை—
தெய்வங்கள் காணிக்கைகேட்டு மடக்குகின்றன.
தம்மையே சுற்றிவரப் பணிக்கின்றன.
சுற்றுகள் அதிகரிக்க அதிகரிக்க
சுற்றுக்களை எண்ணிவைத்துக்
காணிக்கை கேட்கின்றன.
நம்பிக்கை மிக்க நிலையில்
நரிகள் பரிகளாகின்றன.
நம்பிக்கை குறைந்த நிலையில்
பரிகள் நரிகளாகின்றன.
நியாயம் கேட்டால்
வற்றிய நதியில் வெள்ளம் வரும்,
கூடையில் மண் சுமந்து கொட்டவேண்டும்.
கொட்டுவதில் சோம்பலா, பிரம்படி.
பிறகு— முன்போலவே தெய்வங்கள்
காணிக்கை கேட்கத் தேடிவரும்.

கனகம் :

காணிக்கை கேட்கும் தெய்வங்களைக்
கண்டிப்பது நியாயம்தான்.
தெய்வங்கள் உண்டா, இல்லையா?
எனக்குத் தீர்மானிக்கத் தெரியவில்லை.
இருந்தாலும் எனக்கொரு நம்பிக்கை
மனமறியத் தவறு செய்யவில்லையானால்
கடவுளைக் கும்பிடுவானேன்!
கடவுளிருந்தால் காப்பாற்றத்தான் செய்வார்.

காப்பாற்றினால் கடவுள்
இல்லையென்றால் கல்.
கடவுள் என்று இருந்து
செய்த தப்புக்காக வருந்துவோரைக்
கடவுள் காப்பாற்றத்தானே வேண்டும்!
மனமறிந்தே தவறு செய்பவர்கள்தான்
விடாப்பிடியாகக் கடவுளைத் தொழுகிறார்கள்.

(எனக்குள் :
மோகனா எந்த வகை?)

வேலப்பன்:

பூனைகள்தான் ருத்ராட்சங்களை
ஓயாமல் உருட்டுகின்றன.
அருணகிரிகள்தான் அதிகம் பாடுகிறார்கள்.
கோடி கோடியாகக் கொன்று குவிக்கும்
இராஜராஜர்கள்தான்
பெரிய கோயிலை அழகாகக் கட்டுகிறார்கள்.
தேவாரங்களை அவர்கள்தான்
தேடியெடுக்கிறார்கள்.
ஆணியடித்துக் கொன்றவர்கள்தான்
அதிகம் பாடுகிறார்கள்.

(எனக்குள்:
மோகனா தன் குற்றம்
உணர்ந்தா கும்பிடுகிறாள்)

கனகம்:

முத்து, உனக்குத் தெரியாதா
தண்ணீர்க் குழாயடியில் சண்டை
'போடி அடங்காப் பிடாரி!

உன்னை இப்படி விட்டுவைத்திருக்கிறானே
உன் புருஷன்!,
அவன் ஆண்பிள்ளைதானா?''
என்று ஒருத்தி...
முகத்தில் அறைகிறமாதிரி
முந்தாநாள் கேட்க,

(எனக்குள்:
கேட்கவேண்டியதுதான்
என்னைக்கூட அவள்
இப்படித்தானே கேட்டாள்!)

'என்னைச் சொல்லடி
என் புருஷனைச் சொன்னே'..!
என்று கத்தி வீட்டுக்கு வந்து
கதறிக் கதறி அழுது
'புறப்படுமா போகலாம்' என்று
மோகனா கூறினாளாமே!

(அப்படியா? எது
காற்று எதிர்த்திசையில் வீசுகிறது!)

நல்லநாள் பார்த்து
நாளைக்கு அவர்களே
அழைத்துவருவார்கள்.
முத்து! போப்பா,
இவரும் உடன் வருவார்
போய்க் கூட்டிவா
அவளை வருந்தவிடக்கூடாது
அவளுக்கு மூன்று மாதம்

(அடிப்பாவி!
வாழ்க்கைச் சுழலில் என்னை
வகையாக மாட்டிவிட்டாயே)

கோபமும் ஒரு நோய்
நோயாளிகளைக் கோபிக்கலாமா?

வேலப்பன்:

இப்போது மணி பத்து
இன்றைக்கு இதுவே அதிகம்
நாளைக்கு டாக்டரைப்
பார்க்கவேண்டி வருமோ? என்னவோ?

நான்:
ஏன்? கனகத்திற்கு என்ன?

வேலப்பன்:
கனகத்திற்கு இதயம் பலவீனம்
சரி, நாம் வெளியில் போய்வருவோம்
கனகம் சற்றுப் படுக்கட்டும்

(இதயம் இவளுக்குத் தங்கம்!
இவளுக்கு இப்படியொரு நோயா?)

நாங்கள் இருவரும்
குறுகிய சந்துகளிலிருந்து
வீதிகளைக் கடந்து
பூங்காவை நோக்கிப்
பொதுக்கூட்டங்கள் நடைபெறும்
விரிந்த திடலில் உலவிக்கொண்டு
மேகங்களுக்கிடையில் மின்னும்
விண்மீன்களைப் பார்த்தபடி
இங்கும் அங்கும் நின்று
இடையில் டீ குடித்துக்கொண்டு
எங்கள் வாழ்க்கையைப்
பேசிக்கொள்கிறோம்.
"கையைக் காலைக் கட்டிவைத்த
நெசவிலிருந்து—
வயிற்றைச் சுருக்கும் அதன்
வறுமையிலிருந்து—
எதிர்காலத்தை இருளாக்கும் அதன்
நடையிலிருந்து —
சாதியோடு சங்கமித்த அதன்
சகதியிலிருந்து—
நெஞ்சில் அழுகை வளர்த்த அதன்
நினைவிலிருந்து
சுற்றத்தாருடன் தொடுத்த அதன்
உறவிலிருந்து —

வேர் அறுக்க முடியாமல் அறுபட்டு
வேறிடத்தில் விரிந்துவரும் பௌண்டரித் தொழிலில்
வேலையாளாக வேர் பிடிக்கும் கதையை
வேலப்பன் விவரித்தார்,
''கல் வீடுகள் கட்டப்படும்வரை
மண்வீடுகள் தேவை,
மணல் வீடுகள் வேண்டாம்.
நிலங்கள் நடுங்கிவரும் இக்காலத்தில்
மண்வீடுகளாவது கட்டுவோம்''

எனக்கொரு கேள்வி :
எல்லோர்க்கும் யார் கட்டித் தருவார்கள்?

வேலப்பன் :

நம் வழியை நம் காலால்தான்
கடக்கவேண்டும்.
நம் தாகத்திற்கு நாம்தான்
தண்ணீர் தேடவேண்டும்.
வீடு, வேலை, உரிமை, மானம், மரியாதை,
மனிதத்தன்மை எல்லாவற்றையும்
இறுதியில் எமக்கான உலகத்தை
நாமே திரட்டிக்கொள்ளவேண்டும்.
எப்போதோ யாருக்காகவோ
வீட்டுக்குள், விளைநிலத்திற்குள்,
நகரத்திற்குள், நாட்டிற்குள்,
கல்லுக்குள், கலைக்குள்,
சோற்றுக்குள், சுகத்திற்குள்
இழந்துவிட்ட நம்மை
நாமேதான் தேடித் திரட்டிக்கொள்ளவேண்டும்.
தெய்வங்கள், தேவதூதர்கள்,
தியாகிகள், தலைவர்கள்
இவர்களிடமிருந்து நம்மை
நாமேதான் மீட்டுக்கொள்ளவேண்டும்.

கிழக்கில் நிலவு கிளம்பி
வான்வெளியை நிரப்புகிறது.
எனக்கும் ஒரு வானம்
ஒரு நிலவு
வைகறை
வரத்தான்போகிறது!

o

4

எனக்கு இனி இரவு இல்லை.
என்னை நானே மீட்டுக்கொள்ளும் குருச்சேத்திரம்
எனக்குள்ளே நடைபெறுகிறது.

மண்ணுக்கும் விண்ணுக்கும் வாரிசாக
நான் பிறந்தேன்.
வயல்வெளிகளையும் மாடமாளிகைகளையும்
உற்பத்தி செய்கிறேன்.
உற்பத்தி செய்தபோதே இவற்றிலிருந்து
நான் வெளியேற்றப்பட்டேன்.
நந்தனாராகி நான் நெருப்பில் இடப்பட்டேன்.
பாண்டவராகிப் பாழ்வெளியில் திரிகிறேன்.
எனக்குள் நானே அந்நியமாகி
வனவாசம் செய்கிறேன்.
வயல்வெளிகளை மாடமாளிகைகளை
என் கையாலேயே எதிரியிடம் விட்டுக்கொடுத்தேன்.
எதிரியிடம் தோற்றேன்.
எதிரிகளின் வயல்வெளிகளில் மாடுகளானேன்.
உழுதால் உண்ணக்கிடைக்கும் உழமுடியாதபோது
சாட்டையடிகள்.
எதிரிதந்த சாட்டையால்
என்னையே நான் அடித்துக் கொண்டேன்.
எதிரி இட்ட தீயில்
என்னையே எரித்துக் கொண்டேன்.
எதிரி ஆடிய சூதில்
என்னையே பணயமாக்கிக் கொண்டேன்.

எதிரி எனக்குள் குத்திய முத்திரை
ஆழமாகப் பதிந்திருக்கிறது.
இந்த முத்திரையையே
என் தந்தை எனக்கும்
என் தந்தைக்கு அவன் தந்தையும்.. இப்படியே..
ஆழமாகக் குத்தினார்கள்.
இந்த முத்திரைதான் என் மனைவி மீதும்
அவள் தாய்மீதும்.
முத்திரைக்குரியவனிடம்
எங்களை இழந்த நிலையில்
முத்திரையின் அழகில் உள்ளம் மூழ்கி
இராஜ விசுவாசத்துடன் நடந்துகொண்டோம்.
இராஜமார்த்தாண்டர்கள்
அலங்காரமாகப் பவனி வந்தார்கள்.
ஊர்வலக் காட்சியில்
உளம் நெகிழ்ந்திருந்தோம்.

என்னை நான் இழந்து
அவலத்துக்கும் ஆத்திரத்துக்கும்
வசப்பட்ட நிலையிலும்
எனக்குள் எங்கோ ஆழத்தில்
கடலும் வானமும்
சந்தித்துக்கொண்டுதான் இருந்தன.
கொடிகளும் கோலங்களும் எனக்குள்
பின்னிக்கொண்டிருந்தன.
விளையாட்டுத் தோழர்கள் எனக்குள்
மகிழ்ச்சியாக விளையாடினார்கள்.
நான் செய்த முதல் பஸ் பயணம் இப்போதும்..
எனக்குள் திருவிழாக்கள், வானவேடிக்கைகள்,
திண்ணையில் திருநீற்று நெற்றியோடு
பாட்டன் இராகத்தோடு படித்த புராணங்கள்,
வெற்றிலை பாக்கைத் தாளம் தவறாமல் இடித்து
பாட்டி கேட்டுக்கொண்டிருந்த பரவசம்,
நெஞ்சில் நிழற்படமாய் நிலைத்திருக்கிறது.

பள்ளியில் ராகம்போட்டுப் படித்த பாடங்கள்,
உடம்பெல்லாம் சிரிக்க
உச்சிக்குடுமி வாத்தியார் பேசிய பேச்சுக்கள்,
கோள்சொல்லி எனக்குக் குட்டு வாங்கித்தந்து
சிரிக்கும் கோமளம்,
உடலிலும் உள்ளத்திலும் பதிந்து
உரத்தோடு அழகேற்றிய தொழில்வகைகள்,
இவை என்னில் சாகாமலிருக்க—
எப்படி என்னால் சாகமுடியும்?

எனக்குள் நான் புதைத்த உலகம்
சாம்பலாக மறுத்தது.
எனக்குள் புதைத்த உறவுச் செடிகள்
மண்மேடிட்டு மடிய மறுத்தன.
நந்தனாக-நளனாக நான் கற்ற ஆற்றல்கள்
என்னை நாற விடவில்லை.
எனக்குள் இடிகள்..மின்னல்கள்..மழைகள்..
என்னை மீறி இடைவிடாது
என்னை நானே
எனக்குள் தோண்டிக்கொண்டே சென்றபோது
மூன்றடிப் பிச்சைகேட்ட வாமனன்
ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறான்—
விசுவரூபம் வெளியே தெரியாதபடி.

எனக்குத் தெரியாமல்
என்னைக் கேட்காமல்
பாலையாக்கியபோது
பாறையாக்கியபோது
குப்பையாக்கியபோது
புகையவைத்தபோது
இதயமற்று இயக்கமற்றுத்
திகைத்தேன் புலம்பினேன்.

என்னை மீட்க யார் யாரையோ தேடினேன்—
காவி தரித்து வருபவரை
கதர் உடுத்து வருபவரை
சிலுவை தூக்கி வருபவரை

காவி கட்டி
கதர் உடுத்து
சிலுவை தூக்கிக்
காத்திருந்தேன்.

கல்லாக இருந்தேன் சிலையாகவில்லை
கரியாக இருந்தேன் கனலாகவில்லை
படகாக இருந்தேன் துடுப்பாகவில்லை
பாட்டாக இருந்தேன் நான் பாடவில்லை
கல்லாகி கரியாகி படகாகி பாட்டாகித் துடித்தேன்.

என்னை அடித்தபோது திருப்பி அடித்தேன்
அடித்தவன் யார்,
அடி தேவையா, ஏன் என்று சிந்திக்கவில்லை.
வலுத்தவன் அடித்தபோது வாய்விட்டு அழுதேன்.
இளையவனை அடித்து ஏறி மிதித்தேன்.
தந்தை அடித்தபோது தடுமாறினேன்.
மனைவி அடித்தபோது மருண்டேன்.

இப்படியாக அடித்து அடிபட்டு
வாழ்க்கைக்கு அந்நியமானேன்.

o

அந்நியனில்லை இப்போது நான்.
வாழ்க்கைக்குள் நான் சொத்துக்களைத் தேடிவரவில்லை
சொந்தங்களைத் தேடியே வருகிறேன்.
இப்போது நான்
என்னை அடித்தவனை
எதிரியாக அங்கீகரிக்கவில்லை.
நான் அங்கீகரிக்காத சிம்மாசனங்களில்
இவன் இருப்பதை நான் அங்கீகரிக்கவில்லை.
இவன்மீது கோபம் கொண்டிருந்தபோதே
என்மீது நான் அவலம் கொண்டிருந்தேன்.
இவனை நானே ஏற்றி வைத்து
இவனுக்குள் நானே இருந்துகொண்டு
என்னை நானே மேய்த்திருக்கிறேன்.
இவனிட்ட பிச்சையை நான்
விரும்பி உண்டிருக்கிறேன்.
இவனால் எனக்கு ஏற்பட்ட பிச்சைப் புத்தி
இன்னும் என்னைவிட்டுப் போகவில்லை.
சோற்றிலும் சுகத்திலும் இவன் என்னைச்
சிறைவைத்திருக்கிறான்.
ஆடையில் ஆர்ப்பாட்டங்களில் இவன் என்னை
அடைத்து வைத்திருக்கிறான்
அதிகச்சோறு— அதிகச் சுகமே எனக்கு
விடுதலையாகத் தோன்றியிருக்கிறது.
விடுதலை என்ற பெயரிலேயே என்னைச்
சிறை வைத்திருக்கிறான்.
உடம்போடும் நரம்புகளோடும் நான்
உலகில் பிறந்தபோதே
விடுதலைக்கான வாய்ப்புக்களோடு
சிறையிடப்படுகின்றேன்.

என்னைச் சூழ உள்ள நாடும் நாகரிகமும்
வரலாறும் வாழ்க்கையும்
என்னை ஆக்கத்திற்கு அழைப்பது போலவே
அழிவுக்கும் தள்ளுகின்றன.
சிறையின் இறுக்கங்ளோடு சேர்ந்தே
நான் வளர்ந்து வருகிறேன்.

என்னை அழுத்தும் பாரமும்
என்னை மீட்டுக்கொள்வதற்கான நெம்புகோலும்
என்னைச் சுற்றியே-எனக்குள்ளேயே இருக்கின்றன.
நெம்புகோலால் என்னை நிமிர்த்துக் கொள்ளாவிட்டால்
எனது பாரமே என்னைப் புதைத்துவிடுகிறது.
என்னைக்கொண்டே நெம்பிக்கொள்ளாவிட்டால்
எனது பாரமே என்னைக் கொன்றுவிடுகிறது.
என்னை நான் தளர்த்திக்கொள்ளும்போதே
எதிரிகள் என்மீது ஏறிக்கொள்கிறார்கள்.
என்னைத் தளர விடும்போது
எனக்கு நான் எதிரியாகிறேன்.
தளராத இயக்கத்தின்போதே
நான் உயிர்வாழ்கிறேன்.
உறவுகளில் நான் உயிர் வாழ்கிறேன்.
மண்ணோடும் விண்ணோடும் நான்
மகிழ்ந்து உறவாடுகிறேன்.
எனக்குள் அண்டமும்
அண்டத்திற்குள் நானும் கலந்திருக்கிறோம்.
உறவின் இருவழிப் பாதை
எங்களுக்குள் இணைந்திருக்கின்றன.
காற்றும் ஒளியும் இடைவிடாமல்
இதில் இயங்குகின்றன.
எப்போதும் பூத்து வருகின்றன
என்னிடம் புதிய உறவு மலர்கள்.

○ யுகசிற்பி

தன்னை ஒரு கல்லாக்கி, மனத்தை அதில் கருவாக்கி, காலத்தால் தன் மறுபிறப்பு நிகழ— அகலிகை ஏன் காத்திருக்க வேண்டும்? புதிய சமுதாயத்தைக் கடவுளாக்கி, அதன் வரவுக்காகக் காத்திருப்பதால் அது- தரிசனம் தந்துவிடுமா?

முழுமையைக் காண்பதும், தன்னுள் செறித்துக்கொள்வதும், எதிர்காலத்துக்கான மாற்றத்தில் தன் பங்களிப்பைச் செய்து போவதும், முக்தி நெறி.

புராணிகர்களாலும், சமயவாதிகளாலும் திரிக்கப்பட்டதுபோல் முக்தியின் பொருள் வேறுவகையில் திரிக்கப்படுகிறதா?

○

மக்களின் வரிப்பணத்தில் தன்னை வளர்த்து, அவர்களுக்கு நன்றி• காட்டமுடியாமல் நாயினும் கீழாகி, அரசனுக்கு வால் குழைக்கும் அவலத்தை அமைச்சராக இருந்து மாணிக்கவாசகர் உணர்ந்திருக்கிறார்.

இந்த நிலையிலேயே தன்னை ''விலங்குமனச் சிறியவ''னாக ''நாயிற் கடையவனாக'' உணர்ந்து தன் மனிதத்துவத்தை மீட்க அமைச்சர் பதவியைத் துறக்கிறார். ஆள்வோர் தரும் பதவிகளை ஏற்று தன் கல்வி, கேள்வி, ஆராய்ச்சிகளை அடகுவைக்காமல் — திருமாலும் படைப்புக் கடவுளும்போலத் தருக்கித் திரியும் ஆள்வோரை எதிர்த்து அன்பு நெறியை உயர்த்திப் பிடிக்க மாணிக்க வாசகருக்கு அவருடைய காலச் சூழல் வகுத்த பாதை துறவுதான்.

உழைப்பிலிருந்து அந்நியமாக்கப்பட்ட வேலப்பனுக்கும் முத்துவுக்கும், நமக்கும் புதிய வாழ்க்கைக்கான 'போராட்டம்போல' அவருடைய துறவு ஒரு மவுனமான எதிர்ப்பு.

'கல்லுக்குள் கலைக்குள் சோற்றுக்குள் சுகத்திற்குள்
இழந்துவிட்ட நம்மை
நாமேதான் தேடித் திரட்டிக்கொள்ளவேண்டும்' — என்கிற வேலப்பனுக்கு மாணிக்கவாசகர் 'வாழ்க்கைத் திசையை வகுத்துக் கொள்ளாதவர் ஆனது எப்படி!

வேலப்பனுக்கும், முத்துவுக்கும் தாங்கள் அந்நியமாகிவிட்டது புரிகிறது. அந்நியமாதலின் பிடியிலிருந்து தன்னையும் புதிய உலகத்தையும் மீட்டெடுக்க இவர்கள் எந்தப் பாதையை வகுத்துக்கொண்டார்கள்? ஊர்வலங்களும், கோஷங்களும், போலி அரசியல் மாற்றங்களும் பயனற்றதெனக் கண்டுகொண்டபோதே இவர்கள் புதிய பாதையொன்றைத் தேர்வுசெய்ய வேண்டாமா?

○ அறிவன்

'கல்லிகை' யின் நாயகி, அகலிகை அல்ல: கரு, அவளது மோகமும் அல்ல. அவள் ஒரு கல்லுக்குள் தன்னை மறைத்துக் கொள்ளவில்லை. மாறாக, தன்னை - பெண்ணடிமைத் தனத்தை-மனித அடிமைத் தனத்தை -முழுமையாகப் பிரகடனப்படுத்துகிறாள். அகலிகை கதையை, கற்பு என்பதற்கான புதிய வரைவிலக்கணம் தேடும் முயற்சியாகத் திரும்பக் கதை எழுதியவர்-விளக்கம் தந்தவர் செய்தது ஒரு கயமைத்தனமே. பெண் விடுதலை, சாரத்தில், மனித விடுதலை. இங்கே ஒரு கேள்வி, இந்திரன் தோற்றத்திற்கு வரலாற்று நோக்கில் புதிய பரிமாணம் தந்த ஞானி, முனிவனை முற்றிலும் எதிர்நிலை நோக்கில் படைத்திருக்கிறாரோ? முனிவன் உருவாக்கும் பெருந்தெய்வக் கோட்பாடு, இப்படி முற்றான எதிர் மறைத் தன்மை உடையதுதானா?

'எனக்குள் ஒரு வானம்' பல கேள்விகளை எழுப்புகிறது. அந்நியமாதலுக்கான சமூகக் காரணங்கள் பரவலாக, வலுவாக இருக்கிற நிலையில், கனகமும் வேலப்பனும் அந்நியப்படவில்லையே! எப்படி? கதையின் முடிவில் முத்துவுக்கு வாய்க்கும் 'விடுதலை' நிரந்தரமானதா? மீண்டும் அந்நியமாதலுக்கு ஆட்படும் சூழல், அவன் மனைவி மூலமாக, குடும்பம் தொழில் வழியாக வந்து சேராதா? இதை ஞானி ஏன் சுட்டவில்லை? அதுபோலவே சுரண்டப்படும் வர்க்கம் அந்நியமாதலுக்கு உட்படுவது போலவே சுரண்டும் வர்க்கமும் அந்நியமாதலுக்கு ஆட்படுகிறதே! இவர்களுக்குத் தேவைப்படும் பெருந் தெய்வங்கள், ஆச்சார்யார்கள்-ரஜினிஷ், ஜே. கே., சாயிபாபா போன்றவர்களால் இவர்கள் மேலும் அதிக அளவில் அந்நியமாக்கப்படுகிறார்கள். இல்லையா? இவற்றுக்கெல்லாம் கவிதை இடம் தருகிறதா?

ஆயினும், ஒரு நிம்மதி. 'எனக்குள் ஒரு வானம்' கவிதையில் வரும் அந்நியமாதல் பற்றிய பகுதி-2, முற்றிலும் கவிதை: கவிதை! அந்நியமாதலைத் தொட்டால், தோண்டினால் கவிதை பொங்கும்!

O காயாம்பு

காவியம், கதைக் கவிதை முயற்சிகள் நவீன தமிழ்க் கவிதையில் சொற்பம். ஞானியின் 'கல்லிகை' நூல் மேற்சொன்ன வெளியீட்டு வகையில் வந்திருப்பது ஆறுதலளிக்கிறது. ஒரு பூ அனுபவமாகும்போது கூடவே வேரும் கண்ணில் படக் காண்பவர்களால் தான் எந்தச் சின்ன அனுபவமும் கவிதை - காவியமாக விரியும்.

கல்லிகை : இன்றைய சமூகத்தின் அல்லது மனித வாழ்க்கையின் அல்லது நமதின் அல்லது எனதின் வேதனைதான் அகலிகையின் வேதனை என்று குறியீடாக எனக்கு அனுபவமாக்குகிறது இக் குறுங்காவியம். அடிமையாகவும் மறுத்து, ஆண்டானாகவும் மறுத்து - இருக்கும் - அகலிகையின் மனநிலை இன்றைய மனிதனின் உளவியல் சிக்கலில் (பிளவுபட்ட மனோநிலை -அந்நியமாதல்) புலப்படுகிறது என்று கருதுகிறேன்.

எனக்குள் ஒரு வானம் : இதிலும் 'இரட்டை நிலை'ச் சமூகத்தின் அவலம் உறவுகளின் மோதல்களில் தெறித்துத் தெறித்து நம்மேல் பட்டுச் சுடுகிறது. இச் சமூகத்தின் கலாச்சாரத் தளத்தின் மதிப்பீடுகள் (மான மரியாதைகள்) ஆண்டான்களால் நிர்வகிக்கப் பட்டு, மனித உறவுகளின் இயல்பைச் சிக்கலாக்கி — அடிமைப் படுத்தி — மனிதர்களைப் பிளவுபடுத்தி— ஒருவருக்கொருவர் அந்நியமாக்கி வாழ்க்கையின் அர்த்தத்தைப் பிடுங்கிக்கொள்கிறது என்பது சூட்சுமமாகக் குறியீட்டுருவம் பெற்றுப் பாத்திரங்கள் உதவியால் கவிதைக்குள் இயங்குகிறது.

'காலம் மறந்த காட்டில்', 'காலம் எனக்குமேல் காற்றாகக் கழிகிறது', 'உலகமே வாடகை வீடாகி' என்றெல்லாம் கவித்துவமான வரிகளைப் படைத்துள்ள ஞானி மொத்தத்தில் படைப்பாற்றலில் போதிய கவனம் கொண்டிருந்திருக்கவேண்டும் என்றே படுகிறது. அபூர்வமான உவமை, படிம, உருவகச் சேர்க்கைகள் 'தேடி' அனுபவம் கனமின்றி நிற்க, மாறாக- உவமை, படிம, உருவகச் சேர்க்கைகளில் வார்த்தைகளே பருத்துக் கனக்கும் ஆபத்தை இவர் தவிர்த்திருக்கிறார் என்றாலும், இவர் படைப்பு அளவுக்கு அதிகமாக எடை குறைந்து பிறந்திருப்பது ஆரோக்கியமாக இல்லையே —உருவத்திற்கு.

'நாங்கள் கொடுத்ததாகக் கூறப்படும் ஆயுதங்கள்
எங்களை நோக்கியே நீட்டப்படும்போது
எங்கள் ஏமாற்றத்தை எப்படி மறைக்க!' -என்ற வரிகளில்

வரலாற்றுணர்வு கொண்ட, நவீன அரசியல் விமர்சனம் மிகச் சிறப்பாக வெளிப்படுகிறது.

O புலவர் ஆ. துரைசாமி

என் அன்புக்குரியவன் ஞானி. இவன் எப்படியோ என் இதயத்தோடு கலந்துவிட்டான். 'இவன்' என்று இத்தனை உரிமையோடு சொல்லாவிட்டால் என் இதயம் நிறைவடையாது. இவன் எங்கோ மூலையில் இருந்தான். இவனை நடுத்தெருவில் - நாற்சந்தியில் நான் இழுத்துவிட்டேன். இல்லாவிட்டால் இவன் எங்கோ சாமியாராகி, சமாதி தேடிப் போயிருப்பான்.

இவன் பெரியதாக, மிகப்பெரியதாக ஏதாவது செய்வான் என்று நான் எதிர்பார்க்கிறபோது, கடுகைத் துளைத்துக் கடலை நுழைத்துவிட்டேன் என்கிற மாதிரி ஒரு சிறிய கவிதைத் தொகுப்போடு முன்வந்து நிற்கிறான். எனக்குக் கேவலமாக இருக்கிறது. இவன் இப்படிக் கூனிக் குறுகி இருப்பதற்கு நானும்தான் காரணம். இவன் ஏதாவது பெரிதாகச் செய்ய நான் இவனுக்கு உதவியிருக்க வேண்டும். இப்படி உதவிசெய்ய வலிந்து போனாலும் இந்தத் திமிர்பிடித்தவன் அதை ஏற்றுக்கொள்ளமாட்டான்.

இவனுக்குள்ளேதான் அகலிகையும் கௌதமனும்-அதேபோல் இந்திரனும் இருக்கிறார்கள். இவர்கள் போடும் சண்டை இவனுக்குள் இன்றும் நிகழ்வது எனக்குக் கேட்கிறது. தேவராஜை இவன் தனக்குள் புதைத்தது எனக்குத் தெரியும். தேவராஜுக்கு உயிர் கொடுக்க இவன்பட்ட வேதனைகளும் எனக்குத் தெரியும். இவன் இராமனைத்தேடி, கனகத்தைத் தேடிக் காத்திருக்கிற இரகசியமும் எனக்குத்தெரியும்.

இவன் காவி உடைதரித்த ஒரு மார்க்சியவாதி. எனக்கு நம்பிக்கை இல்லை. என்றாவது ஒருநாள் இவன் காணாமற் போய் விடுவான். அந்த நாளில் சூரியன் கறுத்தே தோன்றுவான், திசைகள் வழியடைக்க அப்போது நான் திணறுவேன்.

அழகிய நீல வானம்
வெளியெங்கும் சிறகு விரித்துப்
பரவும் வெண்மேகங்கள்
கரை தகர்க்க ஓலமிடும் அலைக்கூட்டம்
நிழற்படமாய் நிச்சயத்தோடு.

நேர் நடுவில் கம்பீரமாய்
விண்ணையும் கடலையும் கலக்குவதுபோல
நம்மீது விழுவதாய்
அற்புத அழகோடு.., கிரீடத்தோடு
நமக்கு நன்றாகத் தெரிந்த
கடலுக்கும் வானுக்கும் நடுவில்
கனத்த பெரும் பாறை

இன்னும் விழவில்லை!
புவியீர்ப்பு செயலற்றுவிட்டதா!
புரியவில்லையே!

நமக்கு உறுதியாக வாய்த்திருப்பதாக
நம்பியிருக்கும் அறிவாற்றலுக்கு மத்தியில்
வெறுமையாய்...
அழகோடும் அதிர்ச்சி தருவதாகவும்
கம்பீரத்தோடும்
கனத்திருக்கும் அறியாமை!
இறுகிப்போயிருக்கும் அறிவுப் பேதைமை
நம்மைத் தகர்க்கிறதா!
இந்த உலகமும் வாழ்க்கையும் அறிவும்
நமக்கு வசப்படுமா..!
என்றாவது..!

விளக்கம் : ஏ. வி. அசோக்